விலை ரூபா: 15.00
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பதினாறு

சங்கு 12 வள்ளுவர் ஆண்டு 2041 மார்கழி 21 புதன்கிழமை (05.01.2011) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 017

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும் 100 வீத சாதாரண போட்லான் சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

## 13ஆவது திருத்த சட்டமூலத்தின் அடிப்படையில்

# இனப்பிரச்சினைக்குத் தீர்வு

# சகல தரப்புடனும் பேச்சு!

### அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல அறிவிப்பு



(கொழும்பு)

**இனப்பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் மட்டுமின்றி இப்பிரச்சினையுடன் தொடர்புடைய சகல தரப்பினருடனும் அரசாங்கம் பேச்சுவார்த்தை நடத்தும் என அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.** (16ஆம் பக்கம் பார்க்க)

## பிரதம நீதியரசர் விலகவில்லை-அரசு

(கொழும்பு)

பிரதம நீதியரசர் அசோக டி சில்வா இராஜினாமா கடிதத்தை ஒப்படைத்துள்ளதாக வெளியான செய்திகளில் உண்மையில்லை என அரசாங்கம் அறிவித்துள்ளது.

பிரதம நீதியரசர் தனது இராஜினாமா கடிதத்தை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் ஒப்படைத்துள்ளதாக சில ஊடகங்களில் செய்தி வெளியிடப்பட்டது. (16ஆம் பக்கம் பார்க்க)

## 300 இலங்கையர்களை நாடுகடத்த இந்தோனேசிய அரசாங்கம் முயற்சி

(ஜகார்த்தா)

இந்தோனேசியாவிற்குள் சட்டவிரோதமான முறையில் பிரவேசித்த 300 இலங்கையர்கள் நாடுகடத்தப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து இலங்கை-இந்தோனேசிய அரசுகளுக்கிடையில் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அவுஸ்திரேலியாவில் புகலிடம் கோர முயற்சி செய்யும் இலங்கையர்கள் இந்தோனேசியாவை ஓர் மத்திய நிலையமாக பயன்படுத்திக்கொள்வதாக இலங்கைக்கான இந்தோனேசியத் தூதுவர் தெரிவித்துள்ளார்.

சட்டவிரோதமான முறையில் இந்தோனேசியாவிற்குள் பிரவேசிக்கும் பெரும் எண்ணிக்கையிலான இலங்கையர்கள் அவுஸ்திரேலியாவில் (15ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாணத்தில் அச்ச நிலை சர்வ கட்சிக் குழுவை அனுப்புக

### நாடாளுமன்றில் ரணில்



(கொழும்பு)

யாழ்ப்பாணத்தில் வன்முறைகள் அதிகரித்துச் செல்வதாகவும் வடக்கில் அச்ச நிலை காணப்படுவதாகவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கூறினார்.

அதையடுத்து யாழ்ப்பாணத்தின் நிலைமையை பார்வையிடுவதற்காக அனைத்துக் கட்சி பிரதிநிதிக் குழுவொன்றை அங்கு அனுப்புமாறு சபாநாயகர் சமல் ராஜபக்ஷவிடம் (15ஆம் பக்கம் பார்க்க)

## உள்ளூராட்சி சபைகளின் சீரமைப்பு சபையில்

(கொழும்பு)

உள்ளூராட்சி சபைகளின் விசேட சட்டதிட்டங்கள் மற்றும் உள்ளூராட்சி சபை சீரமைக்கப்பட்ட தேர்தல் சட்டமூலம் என்பன நேற்று நாடாளுமன்றில் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இந்த வருடத்தின் முதலாவது நாடாளுமன்ற அமர்வின் விவாதம் சபாநாயகர் சமல் ராஜபக்ஷவின் (16ஆம் பக்கம் பார்க்க)

## குடாநாட்டில் இடம்பெறும் சம்பவங்கள் மக்களின் நம்பிக்கையை சிதைக்கிறது



### நாடாளுமன்றில் அமைச்சர் டக்ளஸ் உரை

(கொழும்பு)

மழைவிட்டாலும் தூவானம் விடவில்லை என்பது போல் யாழ்.குடாநாட்டில் ஆங்காங்கே சில படுகொலைகளும், ஆட்கடத்தல் மற்றும் கொள்ளைச் சம்பவங்களும் நடந்துவருகின்றன.

இவ்வாறு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றும் போது தெரிவித்தார். அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

இந்த நாட்டில் ஒரு யுத்தம் நடந்து முடிந்திருக்கிறது. (16ஆம் பக்கம் பார்க்க)

NIBM
BUILDING COMPETENCIES
Jaffna
யாழ்ப்பாணம்



A statutory Body under the Ministry of Youth Affairs & Skills Development

NIBM இன் கணனிக் கற்கைநெறிகள்

கணனி தொழில்நுட்பத்தில் சான்றிதள் கற்கைநெறி (Certification in Computer Science)

அலுவலகர்களுக்கான கணனி கற்கைநெறி (certification on computers for officers)

அனுமதி பரீட்சை ஆரம்பமாகியுள்ளது

ஆகக் குறைந்த கல்வி தகைமை க.பொ.த சாதாரண தரம் (G.C.E (O/L))

தேசிய வியாபார முகாமை நிறுவனம்
40, கல்லூரி வீதி, (யாழ் இந்துக்கல்லூரி மைதானம் (முன்பாக) யாழ்ப்பாணம்
தொலைபேசி இல: (021) 222 0360, 61, 62

முதலில் அனுமதிக்கப்படும் சிலருக்கு 25% கட்டணக் கழிவு.

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# வன்னியில் காயமடைந்த 6000 பேர் பதவியாவுக்கு கொண்டு வரப்பட்டனர்

## பொலிஸ் பொறுப்பதிகாரி சாட்சியம்

வன்னி யுத்தத்தில் காயமடைந்த நிலையில் பதவியாவிற்கு கொண்டு வரப்பட்டவர்களில் 146 பேர் சிகிச்சை பயனளிக்காது உயிரிழந்த அதே வேளை 6ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் காயமடைந்த நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதாக ஹெப்பிட்டிகொலாவ பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ரஞ்சித் கும்புரேகம நல்லிணக்க ஆணைக்குழுவின் முன்னால் சாட்சியமளிக்கையில் தெரிவித்துள்ளார்.

நல்லிணக்க ஆணைக் குழுவின் விசாரணை நேற்று முன்தினம் கொழும்பிலுள்ள லஷ்மன் கதிர்காமர் நிலையத்தில் நடைபெற்றபோது சாட்சியமளிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தனது சாட்சியத்தில் மேலும் தெரிவித்ததாவது,

2009 மே மாதம் ஆடைத் தொழிற்சாலைக்கு கொண்டுவரப்பட்ட 6000 பேரிடம் வாக்கு மூலம் பதிவு செய்யப்பட்டது. மருத்துவமனையிலிருந்து விடுவிக்கப்பட்டவர்கள் வவுனியா முகாமுக்கு மாற்றப்பட்டனர். அநேகமான காயப்பட்டவர்கள் புதுமாத்தளனிலிருந்து கடல் வழியாக கொண்டுவரப்பட்டனர். சிலர் மணலாற்று பாதை மூலமும் வந்தனர்.

தரைவழியூடாகவும் 2288 பேர் காயமடைந்த நிலையில் பதவியாவுக்கு வருகை தந்தனர். மணலாறு பாதையூடாகவே இவர்கள் வந்தனர்.

காயமடைந்த அனைவரும் தமிழர்களே. ஆனால் சில முஸ்லிம்களும் இருந்தனர். இருந்தாலும் 99 வீதமானவர்கள் தமிழர்களே.

மோதலின் போது காயமடைந்தவர்களிடம் வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டன. அது குறித்த தகவல்கள் என்னிடம் உண்டு.

அவர்கள் எவ்வாறு காயமடைந்தனர் என்பது குறித்தே வாக்குமூலம் பதிவு செய்தோம். அதில் மக்கள் யுத்த வலயத்திலிருந்து வெளியேறும் போது புலிகள் தாக்கியதாகவே கூறினர். இராணுவம் தாக்கியதாகவோ அதன் மூலம் காயமடைந்ததாகவோ மக்கள் கூறவில்லை.

இருதரப்புக்கும் இடையிலான நேரடி மோதலில் காயமடைந்ததாகக் கூட அம்மக்கள் கூறவில்லை. விடுதலை புலிகளின் ஷெல் தாக்குதலில் காயமடைந்ததாகவே கூறினார்.

வாக்குமூலம் வழங்கிய பின்னர் அவர்களிடம் நாம் கையொப்பத்தினை பெற்றுக்கொண்டோம். மருத்துவமனையிலிருந்து விடுவிக்கப்பட்டவர்கள் வவுனியா முகாமிற்கும் சிகிச்சை தேவைப்பட்டவர்கள் வவுனியா மருத்துவ மனைக்கும் அனுப்பப்பட்டனர்.

இதேவேளை காயமடைந்த நிலையில் வந்த சிறுமி ஒருவரை நீதிமன்ற உத்தரவுடன் உறவினர்களிடம் ஒப்படைத்தோம்.

கப்பல் மூலமாக மொத்தமாக 9ஆயிரம் பேர் வந்தனர். இவர்களில் 6ஆயிரம் பேர் காயமடைந்தவர்கள் ஏனையோர் உதவியாட்களாக வந்தனர்.

21தடவை கப்பல் மூலம் காயமடைந்தவர்கள் கொண்டு வரப்பட்டனர். சிறுவர்கள், சாட்சியமளிக்க முடியாதவர்கள் தவிர ஏனையோரிடம் சாட்சியம் பதிவு செய்யப்பட்டது. சிலதடவை உதவியாட்களாக வந்தவர்களிடமும் பதிவு செய்யப்பட்டது.

பதவியா மருத்துவமனையில் 146பேர் இறந்தனர். இறந்தவர்கள் உடல்கள் பிரேத பரிசோதனையின் பின்னர் உடன் வந்தவர்கள், உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

உறவினர்கள் அல்லது உடன் வராதவர்கள் இல்லாத சந்தர்ப்பத்தில் அரச செலவில் அநுராதபுரம் பதவியாவில் இறந்தவர்களில் உடல் அடக்கம் செய்யப்பட்டது எனத் தெரிவித்தார். (ந-5)

# தொழிற் பயிற்சி அதிகார சபையின் புதிய கற்கை நெறிக்கான பதிவுகள்

இலங்கை தொழில் பயிற்சி அதிகார சபையால் நடத்தப்படும் பின்வரும் கற்கை நெறிகளைஎதிர்வரும் 7ந்திகதி வரை பதிவு செய்ய முடியுமென யாழ்.மாவட்ட இணைப்பாளர் இரா. அகிலன் அறிவித்துள்ளார்.

தேசிய தொழில்திறன் சான்றிதழ்க்கு அமைவான (NVQ3) ஆறுமாத காலபயிற்சியை கொண்ட இக்கற்கை நெறிகளை இல.375, கே.கே.எஸ். வீதி,யாழ்ப்பாணத்தில் உள்ள இலங்கை தொழிப்பயிற்சி அதிகார சபையிலும்;வலந்தலைச் சந்தி, காரைநகர்;ஏ-9வீதி, கைதடி;மின்சார நிலைய வீதி, சுன்னாகம்ஆகியகிளை அலுவலகங்களிலும் பதிவுகளை மேற்கொள்ளலாம்.

• பதிவு செய்யக் கூடிய கற்கை நெறிகள் பின்வருமாறு,

தேசிய தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் (NCICT),மரவேலைப் பொறியியல், ஆடை வடிவமைப்பாளர்,மோட்டார் வாகனப் பொறியியல், கட்டிடநிர்மாணம்,அலுமினியம் பொருத்துகை,கணனிவன்பொருள், வெல்டிங், முச்சக்கர வண்டி திருத்துதல், வெளியிணைப்புஇயந்திரம்திருத்துகை, அழகுக்கலை, வீட்டு மின்னிணைப்பு (ந)

# பாடசாலைகளில் வெளிவாரி மதிப்பீடு வடக்கு மாகாணம் களத்தில் குதிப்பு

## நேற்று முத்துத்தம்பி ம.வியில் ஆரம்பம்

வடக்கு மாகாணத்தில் வாரம் இரண்டு பாடசாலைகள் மாகாணக் கல்வித் திணைக்களத்தினால் வெளிவாரி மதிப்பீடு மேற்கொள்ளப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் அறிவித்துள்ளதாவது,

வடக்கு மாகாண பாடசாலைகளில் கடந்த வருடம் வெளிவாரி மதிப்பீடு மேற்கொள்ளப்படவில்லை. இந் நிலையில் நடப்பு ஆண்டு முதல் வாரம் இரு பாடசாலைகள் வெளிவாரி மதிப்பீடு மாகாணக் கல்வித் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படும்.

இப் பணி நேற்று யாழ்.திருநெல்வேலி முத்துத்தம்பி மகா வித்தியாலயத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது என வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் குறிப்பிட்டார்.

இதேவேளை வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படும் வெளிவாரி மதிப்பீட்டில் பாடசாலைகளின் பண்புத் தரசுட்டிகள் மேற்பார்வை செய்யப்படும் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ந-5)


# கிருஷ்ணா கல்வி நிறுவனம்

மானிப்பாய்

# ஆதவன் கல்வி நிறுவனம்

அளவெட்டி

A/L 2013

ஜனவரி 05 புதன் 04.30

பாடங்களும், ஆசிரியர் குழாமும்

| பாடம் | ஆதவன் அளவெட்டி | கிருஸ்ணா மானிப்பாய் |
|---|---|---|
| தமிழ் | கோபி | குழந்தை |
| இந்துநாகரீகம் | ரமணன் | சந்திரன் |
| அளவையியல் | E.S பவன் | S.S. மனோகரன் |
| நாடகம் அரங்கியல் | ரமேஸ் | ரமேஸ் |
| அரசியல் | அசோக் | றெபின்சன் |
| வரலாறு | R.R ஆனந்தன் | R.R ஆனந்தன் |
| விவசாயம் | சசிக்குமார் | சசிக்குமார் |
| புவியியல் | செல்வா | செல்வா |
| மனையியல் | மஜியன் | மஜியன் |
| கிறிஸ்தவம் | யூட் | யூட் |
| சமஸ்கிறிதம் | உமா | உமா |
| இலகு கணிதம் | ஐங்கரன் | தவசேகர் |
| பொருளியல் | ஜெயக்குமார், சிறி | தயாபரன் |
| வணிகக்கல்வி | நந்தீஸ் | வரதன் |
| கணக்கீடு | சீலன் | D.Sam |
| புள்ளிவிபரவியல் / கணிதகம் | தவசேகர் | தவசேகர் |

(கி-2053)


# பாக்.பஞ்சாப் மாநில ஆளுநர் நேற்று சுட்டுக் கொலை

## பாதுகாத்து நின்றவனே உயிரை பறித்துக்கொண்டான்

பாகிஸ்தானின் பஞ்சாப் மாநில ஆளுநர் சல்மான் தாஸீர் தனது பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவரால் செவ்வாய்க்கிழமை சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமபாத்தில் உணவகமொன்றிலிருந்து தனது வாகனத்தை நோக்கி நடந்து வந்தபோது தனது பாதுகாப்பு ஊழியர் ஒருவரால் அவர் சுடப்பட்டார். 56 வயதான தாஸீரின் உடலில் 9துப்பாக்கிரவைகள் பாய்ந்துள்ளன.

ஆளுநரை சுட்டுக்கொன்றபின் மேற்படி பாதுகாப்பு ஊழியர் தாமாக சரணடைந்தார். ஆளுநர் சல்மான் தாஸீர்நாட்டின் புனிதச்சட்டங்களைநிந்தித்து பேசியதால் அவரை கொன்றதாகவும் இதற்காகதான் பெருமையடைவதாகவும் மேற்படி பாதுகாப்பு உத்தியோகத்தர் தெரிவித்ததாக அவரை விசாரித்து வரும் அதிகாரிகள் கூறியுள்ளனர்.



கடந்த மாதம் அவர் பாகிஸ்தான் அரசாங்கத்திற்கு அறிவிக்காமல் இலங்கைக்கு இரகசிய விஜயம் செய்தமை தொடர்பாக சர்ச்சை ஏற்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

பல்வேறு விடயங்கள் குறித்து வெளிப்படையாக கருத்துகளை தெரிவித்துவந்த தாஸீர் இஸ்லாமிய ஆயுதக்குழுக்களை கடுமையான விமர்சித்து வந்தவர். பாகிஸ்தான் மக்கள் கட்சியைச் சேர்ந்த தாஸீர் ஜனாதிபதி ஆஸிவ் அலி சர்தாரியுடனும் பூட்டோ குடும்பத்துடனும் நெருக்கமானவர்.

பாகிஸ்தான் அரசாங்கம் மூன்று நாள் துக்கப் பிரகடனம் செய்துள்ளதுடன் பாகிஸ்தான் மக்கள் கட்சி 15 நாள் துக்கதினம் அனுஷ்டிக்கவுள்ளதாக அறிவித்துள்ளது. (ந-5)


# செல்லா சினிமா

இன்று முதல்

சரத்குமார், மீனா, வடிவேலு மற்றும் பலர் நடித்த



அநேக ரசிகர்களின் வேண்டுகோளுக்கிணங்க இன்னும் சில தினங்கள் மாத்திரம்

காட்சி நேரம்:10.30,2.30,6.30

Sale Sale Sale... மாபெரும் மலிவு விற்பனை

# லைடன் புடவை நிலையம்

வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கிணங்க பொங்கல் பண்டிகை வரை மலிவு விற்பனை நீடிக்கப்பட்டுள்ளது. சகல விதமான றெடிமேற் ஆடைகள் ஆண், பெண் இருபாலாருக்கும் ஏற்ற பாடசாலை சீருடை துணி வகைகள் என்பவற்றை விசேட கழிவு விலையில் மலிவாக பெற்றுக்கொள்ளலாம்.



லைடன் புடவை நிலையம்

410, ஆஸ்பத்திரி வீதி (பஸ் நிலையம் முன்பாக)

யாழ்ப்பாணம் தொ.பே:021 222 2381

(சி-1996)

மானிப்பாயில் !!!

O/L பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கான

புதிய பிரிவுகள் ஆரம்பம் !!!

- Beginners Diploma in - GIT
- Diploma in Ms Office
- Diploma in Computer Hardware
- Diploma in Desktop Publishing
- Diploma in Computer Network
- Diploma in Internet e mail
- Diploma in Website Designing
- Diploma in Mobile Phone Repair
- Diploma in Accounting Packages
- Diploma in Spoken English

23/01/2011ற்கு முன்னர் பதிவுகளை மேற்கொள்ளவும்

மேலதிக விபரங்களுக்கு :-

UNI - ICT Education (Pvt) Ltd
Jaffna Road, Manipay.
T.P. - 021 742 9325 / 0777 110 862
(மானிப்பாய் பிரதேசசபைக்கு முன்பாக)

(சி-2046)

# தவறிவிட்டது

வற்றாப்பளையில் இருந்து கரிப்பட்ட முறிப்புக்கு செல்லும் பஸ்ஸில் பாக் ஒன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்காணும் தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளவும்.

(3361) 0770800948

# இன்று ஒரு தகவல்

## களிப்பு–மகிழ்வு–ஆனந்தம்

"எனக்கு வாழ்க்கையே வெறுத்துப் போய்விட்டது சேர்" என்று சொல்லிக் கொண்டு ஒருத்தர் என்னிடம் வந்தார்.

என்னிடம் வந்து சிறிது நேரத்துக்கு பின் அவர் அப்படிச் சொல்லியிருந்தால் அதில் ஓர் அர்த்தம் இருந்திருக்கும்.

வருவதற்கு முன்பேவாழ்க்கைவெறுத்துப்போய்விட்டதுஎன்கிறார்.

"என்ன விடயம்?" என்று விசாரித்தேன்.

"எங்கள் வீட்டில் தினமும் 3 வேளையும் ஒரேமாதிரியான சாப்பாடு சேர் வித்தியாசமே கிடையாது. இப்படியே 3மாதமாக சாப்பிட்டுக்கொண்டிருக்கின்றேன். அதைவிட பட்டினி கிடந்து சாகலாம் என்று தோன்றுகிறது" என்றார்.

ஒரு பெரியவர் (ரஜனீஷ்) சொன்ன தத்துவத்தை சொல்வதற்கு ஆள் கிடைக்காமல் தவித்துக் கெண்டிருந்தேன். இப்பெழுது ஒருத்தர் கிடைத்து விட்டார். விடுவேனா? சொல்ல ஆரம்பித்தேன்.

நாம் அனுபவிக்கும் உணர்வுகளில் களிப்பு, மகிழ்வு, ஆனந்தம், ஆகிய மூன்றுக்கும் வித்தியாசமுண்டு.

மேம்போக்காகப் பார்ப்பதற்கு இம் மூன்றும் ஒன்றுமாதிரித் தோன்றும். ஆனால் அது அப்படியில்லை.

களிப்பு என்பது உடம்பைப் பொறுத்தது.

மகிழ்வு மனதைப் பொறுத்தது.

ஆனந்தம் ஆன்மாவைப் பொறுத்தது.

இப்படி இந்த 3 வகையான தலைப்புக்களின் தன்மையும் வேறு. முதலில் களிப்பை எடுத்துக் கொள்வோம்.

நம் புலன்களுக்குக் களிப்பைத் தரக் கூடிய பொருட்களுக்கு சில விசேட குணம் உண்டு.

அது எப்டி என்றால்;

சீக்கிரமாக சலிப்பை உண்டுபண்ணும். ஒருத்தர் அந்தப் பொருளை எடுத்துக் கொண்டால் அது இன்னொருவருக்குக் குறைந்துவிடும். உணவு, உடை இவையெல்லாம் களிப்பைத்தரக் கூடிய பொருட்கள்.

உதாரணத்துக்கு...

ஒரு சப்பாட்டு மேசையில் ஒரு பாத்திரத்தில் 10 இட்லி இருக்கின்றன. அதில் இரண்டை நாம் தட்டில் எடுத்துவைத்துச் சாப்பிடுகிறோம்.

நாம் சாப்பிட்ட அந்த இட்லி நிச்சயமாக எதிரில் உட்கார்ந்திருப்பவருக்கில்லை. நாம் சாப்பிட்ட அதே இட்லியை அவரும் சாப்பிடமுடியாது. அவர் வேறுதான் எடுத்து வைத்திருக்க வேண்டும்.

அதேபோல் நாம் ஓர் உடுப்பை எடுத்துப் போட்டுக் கொண்டால் அது இன்னொருவருக்கு இல்லையென்றாகிவிடும். ஒரு உடுப்பை ஒரேநேரத்தில் இரண்டு பேரும் போட்டுக் கொள்ள முடியாது.

புலன்களுக்குக் களிப்பைத் தரக்கூடிய இப்படியான பொருட்களெல்லாம் முதல் தடவை நமக்குக் கொடுக்கும் களிப்பை இரண்டாவது தடவையும் கொடுப்பதில்லை.

இட்லியை ஒவ்வொன்றாகச் சாப்பிடுகிறோம் என்று வைத்துக் கெள்ளுங்கள். முதல் இட்லி தரக் கூடிய சுவையை முப்பதாவது இட்லி தருமா?

முதல் தடவை புது உடுப்பு போட்டுக் கொள்ளும் போது இருக்கும் களிப்பு நூறாவது தடவை போட்டுக்கொள்ளும் போது இருக் கிறதா?

இது தான் களிப்பு. அதாவது சீக்கிரமாக சலிப்பை தரக் கூடியது ஒருத்தர் எடுத்துக் கொண்டால் இன்னொருவருக்கு குறைந்து போகக்கூடியது.

ஆனால் 'மகிழ்வு' என்பது அப்படியில்லை. ஒருத்தர் அனுபவிப்பதனால் இன்னொருவருக்குக் குறைந்துவிடாது.

காலையில் சூரியன் உதயமாவதைப் பார்த்து சந்தோஷப் படுகிறீர்கள். அதையே இன்னொருவரும் பார்த்து சந்தோஷப்படலாம்.

ஒரு நல்ல சங்கீதத்தை கேட்கிறீர்கள். ஒரு அழகான ஓவியத்தை இரசிக்கிறீர்கள். நீங்கள் இரசிக்கும் அதேநேரத்தில் இன்னொருவரும் அதை இரசிக்கலாம். அதனால் அது குறைந்து விடப் போவதில்லை. இது மகிழ்வு .ஆனால் ஒன்று...

ஒரே பாடலைத்திரும்பத் திரும்பக் கேட்டுக் கெண்டிருந்தால் கடைசியில் அலுப்புத்தட்டும். அதாவது மகிழ்வு என்பது எப்படியென்றால். மற்றவர்களுடன் பகிர்ந்து கெள்வதனால் குறையாது. ஆனால் ஒரே பொருள் மீண்டும் மீண்டும் அனுபவிப்பை த் தரும் போது முதலில் மகிழ்வு அதிகரித்து அதன்பின் அது மங்கி மறைந்துவிடும்.

சரி... மூன்றாவது சுகம் தரக் கூடியது 'ஆனந்தம்' என்பது எப்படியென்றால்...

இது நமக்குள்ளிருந்து சுரப்பது. மனச்சலனங்களிலிருந்து விடுபடும்போது இந்த ஆனந்தம் நமக்குக் கிடைக்கும். இது நிலையான சுகம். ஆத்மசுகம். களிப்பிலிருந்து மகிழ்விற்கும் மகிழ்விலிருந்து ஆனந்தத்துக்கும் செல்வதுதான் .மனிதன் நடத்தவேண்டிய முக்கியமான பயணம்.

இவ்வளவு விடயத்தையும் கேட்டுவிட்டு இந்தக் காலப் பையன் ஒருத்தன் என்னிடம் சொன்னான்.

"சேர் இப்ப நீங்க ஒரு சாப்பாட்டு மேசையில் ஒரு 10 இட்லியை வையுங்கள். என்னை உட்கார வையுங்கள்.எதரில் இன்னொருவரை உட்கார வையுங்கள். நான் களிப்பு மகிழ்வெல்லாம் தாண்டி நேரடியாக ஆனந்தத்திற்கு பயணம் செய்து காட்டுகிறேன்'. 'என்றார்?

"அது எப்படி?என்ன பண்ணுவாய்?" என்று ஆச்சரியமாகக் கேட்டேன்.

இரண்டு இட்லிசாப்பிட்டால்தானே களிப்பு. நான்10 இட்லியையும் மொத்தமாகச் சாப்பிட்டு விடுவேன். அடுத்தவனுக்கு எதுவும் கிடைக்காது. அவனுக்குக் கிடைக்காதபடி நாம் சாப்பிட்டு விடுகிறோமே. அது தானே நமக்கு ஆனந்தம் என்கிறான் சேர்

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# வடக்கு - கிழக்கில் தமிழ்மொழிமூல நிர்வாக அதிகாரிகள் நியமிக்கப்படவுள்ளனர்

வடக்குக் கிழக்கில் தமிழ்மொழி மூல நிர்வாக அதிகாரிகளை நியமிக்கவும் அதற்கென தனியான போட்டிப் பரீட்சை நடத்தவும் அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

வடக்கு– கிழக்கு மாகாணங்களில் நிர்வாக சேவையில் நிலவும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு துரித நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொண்டு வருகின்றது.

இவ்விரு மாகாணங்களிலும் தமிழில் பணியாற்றக்கூடிய அதிகாரிகளை நியமிக்கும் வகையில் தனியான போட்டிப் பரீட்சைகளை நடத்தி அப்பிரதேசங்களிலிருந்தே அதிகாரிகளைத் தேர்ந்தெடுக்கவும் அரசாங்கம் உத்தேசித்துள்ளது என உள் நாட்டலுவல்கள் அமைச்சு தெரிவித்துள்ளது.

ஏற்கனவே நிர்வாக சேவைக்கான பொது போட்டிப் பரீட்சை நடத்தப்பட்டு பெரும்பாலானோர் தெரிவு செய்யப்பட்டுள்ள போதிலும் வடக்கு– கிழக்கு மகள்கள் நலன் கருதி தமிழ் மொழியில் பணியாற்றக் கூடியவர்களையே அங்கு நியமிக்க வேண்டுமென அரசாங் கம் தீர்மானித்துள்ளது.

(ஸ்ரீ–2)

# உலக ஆசிரியர் சங்கத்தின் செயலாளராக இலங்கையர் தெரிவு

இலங்கை ஆசிரியர் ஒருவருக்கு உலக ஆசிரியர் சங்கத்தில் செயலாளர் பதவி கிடைத்துள்ளது.

இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் பிரதான செயலாளரான மஹிந்த ஜயசிங்கவிற்கே உலக ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் பதவி கிடைத்துள்ளது.

கடந்த மாதம் 26, 27 மற்றும் 28ஆம் திகதிகளில் பங்களாதேஷ் தலைநகர் டாக்காவில் நடைபெற்ற. உலக ஆசிரியர் சங்க மாநாட்டில் இலங்கையை பிரதிநிதித்துவப் படுத்தி மஹிந்த ஜயசிங்க கலந்து கொண்டார்.

இந்த மாநாட்டில் நூற்றுக்கும் அதிகமான உலக நாடுகளைச் சேர்ந்த ஆசிரியர் சேவை சங்கத்தின் பிரதி நிதிகள் கலந்து கொண்டதாகவும் இதன்போது உலக ஆசிரியர் சங்கத்தின் செயலாளராக இவர் தெரிவு செய்யப் பட்டுள்ளார்.

இப்பதவி கிடைத்தமை தனக்கு மட்டுமல்லாது முழு இலங்கைக்கும் பெருமையான விடய மென உலக ஆசிரியர் சங்கத்தின் செயலாளரும் இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் செயலாளருமான மஹிந்த ஜயசிங்க குறிப்பிட்டார். (ஸ்ரீ–2)

# கிழக்கில் தொற்றுநோய்கள் பரவும் அபாயமுள்ளது

## சுகாதார அமைச்சு எச்சரிக்கை

(கொழும்பு)

வெள்ளம் காரணமாக கிழக்கு மாகாணத்தில் தொற்று நோய் பரவும் அபாயமுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதன்காரணமாக குடிநீரைப் பருகும் போது மிகுந்த அவதானத்துடன் செயற்பட வேண்டுமென அமைச்சின் செயலாளர் வைத்தியர் பாலித மஹிபால குறிப்பிட்டார்.

வெள்ளம் காரணமாக இடம் பெயர்ந்துள்ள மக்களிடையே நீர் மற்றும் உணவின் ஊடாக பல்வேறு நோய்கள் பரவும் அபாயம் உள்ளதாகவும் இதன் காரணமாக குடிநீரைக் கொதிக்க வைத்து பருகுமாறும் தூய இடங்களில் இருந்து நீரைப் பெற்று கொள்ளுமாறும் சுகாதார அமைச்சு வலியுறுத்தியுள்ளது.

அத்துடன் வெளியிடங்களில் உணவுப் பொருட்களை கொள்வனவு செய்வதனை தவிர்க்குமாறும் வீட்டில் சமைத்த உணவுகளை உட்கொள்ளுதல் சிறந்ததெனவும் சுகாதார அமைச்சின் செயலாளர் குறிப்பிட்டுள்ளார்.(ஸ்ரீ–2)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 150 | 120 | 180 | 150 |
| உருளைக்கிழங்கு | 50 | 60 | 80 | 60 |
| பச்சைமிளகாய் | 200 | 200 | 250 | 230 |
| தக்காளி | 70 | 80 | 110 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 40 | 40 | 50 |
| கோவா | 60 | 80 | 100 | 70 |
| கரட் | 60 | 80 | 120 | 90 |
| பூசணி | 40 | 50 | 40 | 50 |
| புடோல் | 30 | 90 | 100 | 90 |
| வாழைக்காய் | 50 | 40 | 50 | 40 |
| சின்ன வெங்காயம் | 180 | 240 | 240 | 220 |
| பெரிய வெங்காயம் | 180 | 180 | 160 | 160 |
| பாகற்காய் | 100 | 140 | 200 | 180 |
| வெண்டிக்காய் | 60 | 70 | 90 | 70 |
| கருணைக் கிழங்கு | 80 | 50 | 60 | 50 |
| பயற்றங்காய் | 100 | 170 | 200 | 180 |
| லீக்ஸ் | 100 | 120 | 140 | 120 |
| பீற்றூட் | - | 100 | - | - |
| கறிமிளகாய் | - | 200 | 300 | 230 |
| முருங்கைக்காய் | - | - | - | - |
| போஞ்சி | 100 | 120 | 160 | 150 |
| கத்தரிதம்புள்ள | 100 | 100 | 150 | 100 |
| கீரை – 1 பிடி | 15 | 40 | 50 | 45 |
| தேசிக்காய் | 180 | 80 | 100 | 90 |
| தேங்காய் (ஒன்று) | 35-40 | 50 | 50 | 50 |

# இராசி பலன்

05.01.2011
(மார்கழி 21, புதன்கிழமை).
சூரிய உதயம் முற்பகல் 6.22 மணி
பிரதமை பிற்பகல் 3.4 மணிவரை
உத்தராடம் பின்னிரவு 5.47மணிவரை
இராகுகாலம் 12.31-2.01 மணிவரை
சுபநேரம் 5.01-6.31மணிவரை
அமிர்தசித்தம்

**மேடம்** யோகமான நாள்,யோசிக்காமல் செய்த காரியங்களில் வெற்றி பெறுவீர்கள், வீட்டுத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும்.சுப செய்திகள் வந்து சேரும் நாள்.

**இடபம்** தடைப்பட்ட காரியங்கள் நிறைவேறலாம், தந்தை வழி உறவினர்கள் மூலம் சில உதவிகள் கிடைக்கலாம், சொத்துக்கள் தொடர்பில் எடுத்த முயற்சி வெற்றி பெறும்.

**மிதுனம்** எடுத்த காரியத்தை நிதானமாகச் செய்வது நல்லது, வேலைச்சுமை அதிகரிக்கும், உடல் நலனில் அதிக அக்கறை எடுக்க வேண்டிய நாள்.பணப் பற்றாக்குறையுண்டு.

**கடகம்** கல்யாணக் கனவுகள் நனவாகலாம், நீண்ட நாளைய நண்பர்கள் ஒருவரின் நெருங்கிய நட்புக் கிடைக்கலம், தொழிலில் முன்னேற்றம் காணப்படும்.

**சிங்கம்** பெண்களால் பெருமை சேரும் நாள், மறைமுக எதிர்ப்புக்கள் குறையும், தொழில் வளர்ச்சி கருதி திடீர் முடிவெடுப்பீர்கள், தேக நலன் சீராகும்.

**கன்னி** பிள்ளைகளால் பெருமை ஏற்படும் நாள்,நல்ல தகவல்கள் வந்து சேரலாம், மனநிறைவு கூடும் நாள், பெருளாதார நிலை திருப்தி தரும்.

**துலாம்** பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம் பெறலாம், கால நேரத்திலேயே இனிய செய்திகள் வந்து சேரலாம், தொழிலில் ஆர்வத்துடன் செயற்படுவீர்கள்.

**விருச்சிகம்** பயணங்களால் பலன் கிடைக்கும், தேவையற்ற செலவுகளைக் குறைக்கும் எண்ணம் தோன்றும், எடுத்த காரியங்கள் கைகூடும், போசன சுகமுண்டு.

**தனுசு** உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கலாம், நாவன்மையால் நற்பெயர் எடுப்பீர்கள், உஷ்ண சம்பந்தமான ரோக நிலை ஏற்படும், தனவிரய முண்டு.

**மகரம்** பெரிய மனிதரின் சந்திப்புண்டு, கற்பனை மிகுதியாகக் காணப்படும், பிறர் பாராட்டும்படியான வேலை ஒன்றைச் செய்து முடிப்பீர்கள், போசன சுகமுண்டு.

**கும்பம்** சாப்பிடக்கூட நேரமில்லாமல் சிலவேலைகளைச் செய்ய வேண்டி வரலாம், சயன சுகக் குறைவுண்டு, காரிய அலைச்சலுக்குரிய நிலையேற்படலாம்.

**மீனம்** பணவரவு அதிகரிக்கும், நீண்ட நாளைய ஆசையொன்று நிறைவேறும், விருந்து விழாக்களில் கலந்து கொண்டு மகிழ்வீர்கள், உறவினர் வருகையுண்டு.

வளவன்





யா/மாரீசன்கூடல் றோ.க.த.க.பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்துகொண்ட யாழ்ப்பாண தேசிய கல்வியியற் கல்லூரி உபபீடாதிபதி பா.தனபாலன் அவரது பாரியார் திருமதி. கர்ணி தனபாலன், சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட இளவாலை வடமேற்கு கிராம அலுவலர் பி.அன்ரனிறோய், மாரீசன்கூடல் பங்குத்தந்தை அருட்பணி எம்.எம்.எச்.ஞானேந்திரன் அடிகள், அதிபர் சூ.நோபேட் உதயகுமார் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் கடந்த 2010 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்களுடன் விருந்தினர்கள் நிற்பதையும் படங்களில் காணலாம்.

## முன்பள்ளி ஆசிரியர்களுக்கான டிப்ளோமா கற்கை நெறி

(அல்வாய்)

வடமராட்சி முன்பள்ளி ஆசிரியர்களுக்கான டிப்ளோமா கற்கைநெறி எதிர்வரும் 9 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு யா/வேலாயுதம் மகா வித்தியாலயத்தில் ஆரம்பமாகவுள்ளதாக வடமராட்சி வலய முன்பள்ளி உதவிக்கல்விப்பணிப்பாளர் சி.தில்லைநாதன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-3-19)

## தைத்திருநாளை முன்னிட்டு பட்டம் விடும் போட்டி

(வல்வெட்டித்துறை)

வல்வெட்டித்துறை விக்னேஸ்வரா சன சமூக சேவா நிலையத்தின் ஏற்பாட்டில் எதிர்வரும் 15 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 2 மணிக்கு தைத்திருநாளை முன்னிட்டு மாபெரும் பட்டம் விடும் போட்டி உதயசூரியன் உல்லாச கடற்கரையில் இடம்பெறவுள்ளது.

சுமார் 15 வருடங்களுக்குப் பின் நடத்தப்படும் இப்போட்டியில் யாழ்ப்பாணத்தின் எல்லாப் பகுதியில் இருந்தும் போட்டியாளர்கள் பங்குபற்றலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கான பதிவுகளை எதிர்வரும் 13 ஆம் திகதி வியாழக்கிழமைக்கு முன் மேற்படி சனசமூக நிலையத்தில் மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்போட்டியில் வெற்றிபெறும் வீரர்களுக்கு பெறுமதிமிக்க பரிசில்கள் வழங்கப்படும். (ஸ்ரீ-3-63)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

நவீன சந்தைக் கடைகளின் வாடகை மீளாய்வு பற்றிய கலந்துரையாடல் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு நடைபெறவுள்ளதாக மாநகர செயலர் அறிவித்துள்ளார். இதற்கமைய இந்நிகழ்வுகள் மாநகர முதல்வர் திருமதி யோ.பற்குணராஜா தலைமையில் மாநகர சபை வளாகத்தில் உள்ளமாநாட்டுமண்டபத்தில்நடைபெறவுள்ளது.

மேற்படி கலந்துரையாடலில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-4-17)

## கலந்துரையாடல்

(அல்வாய்)

முன்பள்ளி டிப்ளோமா கற்கைநெறி வளவாளர்களுக்கான கலந்துரையாடல் எதிர்வரும் 8 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு தியாகி அறக்கொடை நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் யாழ்.மாவட்டத்தில் உள்ள 5 கல்வி வலயங்களிலும் இருந்து தெரிவு செய்யப்பட்ட வளவாளர்களை தவறாது பங்கு பற்றுமாறு ஆறுதல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் சுந்தரம் டிவகலாலா அறிவித்துள்ளார். (ஸ்ரீ-3-19)

## காணாமல்போன ஐம்பொன்னாலான விக்கிரகங்கள் பொலிஸாரால் மீட்பு

எழுதுமட்டுவாழ் விலுவளை கண்ணகை அம்மன் ஆலயத்தில் அண்மையில் பல லட்சம் ரூபாய் பெறுமதியான ஐம்பொன்னாலான விக்கிரகங்கள் கொள்ளையிடப்பட்டன.

இது குறித்து பல வழிகளிலும் விசாரணைகளை மேற்கொண்ட கொடிகாமம் பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து நேற்று யாழ்.நகரிலுள்ள கடையொன்றுக்கு விரைந்த பொலிஸார் அங்கிருந்து மேற்படி விக்கிரகங்களை கைப்பற்றியதுடன் அக்கடையின் உரிமையாளர் மற்றும் ஊழியர்களையும் கைது செய்தனர்.

இது குறித்து விசாரித்தபோது மேற்படி விக்கிரகங்கள் தங்களுக்கு விற்கப்பட்டதாக அவர்கள் தெரிவித்தனர். மேற்படி நபர்கள் நேற்று சாவகச்சேரி நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

சாவகச்சேரி நீதவான் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகம் கணேசராசா முன்னிலையில் விசாரணை இடம்பெற்றபோது மன்றில் சந்தேகநபர்கள் விக்கிரகங்களை வாங்கியதை ஏற்றுக்கொண்டதுடன் விற்பனை செய்த நபர்களை யார் என்று அடையாளம் தெரியாதென்று தெரிவித்தனர்.

இதனையடுத்து சந்தேக நபர்களை தலா 50 ஆயிரம் ரூபாய் ஆட்பிணையில் செல்ல அனுமதித்த நீதவான் ஐம்பொன்னாலான விக்கிரகங்களை ஆலய பரிபாலன சபையிடம் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டதுடன் எதிர்வரும் தவணைக்குள் விக்கிரகங்களை மன்றில் பாரப்படுத்துமாறும் நீதவான் தனது தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளார்.

கொள்ளையுடன் தொடர்புடைய சந்தேக நபர்களை கைது செய்து மன்றில் ஆஜர்படுத்துமாறு கொடிகாமப் பொலிஸாருக்கு நீதவான் உத்தரவிட்டார். (ஸ்ரீ-3,24)

## நீதிமன்ற பதிவாளர் நியமனம்

(கரவெட்டி)

சாவகச்சேரி நீதவான் நீதிமன்ற பதிவாளராக சந்திரா ஜெயந்த நாணயக்காரா புதிதாக நியமிக்கப்பட்டுள்ளார்.

மாத்தறை மேல் நீதிமன்ற பதிவாளராக கடமையாற்றிய இவர் கடந்த 3 ஆம் திகதி திங்கட்கிழமை முதல் சாவகச்சேரி நீதவான் நீதி மன்ற நீதிபதி மாணிக்கவாசகம் கணேசராசா முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து தமது கடமையை பொறுப் பேற்று கொண்டார். (ஸ்ரீ-3-24)

## சைக்கிள் திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய மேலும் மூவர் கைது

(கரவெட்டி)

வடமராட்சியில் நீண்டகாலமாக துவிச்சக்கர வண்டிகளை களவாடிய குழுவின் முக்கிய நபர் கடந்த 2 ஆம் திகதி அல்வாய் கிழக்கு மாலுசந்தி பகுதியில் வைத்து பொதுமக்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டு நெல்லியடிப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

குறித்த நபரிடம் விசாரணைகளை முடுக்கிவிட்ட பொலிஸார் அவர் கொடுத்த தகவலின் அடிப்படையில் அல்வாய் வடக்கு பகுதியில் வைத்து 3 சந்தேக நபர்களை கைது செய்துள்ளனர்.

அத்துடன் சந்தேக நபர்களின் வீடுகளில் இருந்து 19 துவிச்சக்கரவண்டிகள் மீட்கப்பட்டுள்ளன.

மேலும் ஒரு சந்தேக நபரை பொலிஸார் வலைவீசி தேடி வருகின்றனர்.

மீட்கப்பட்ட துவிச்சக்கரவண்டிகள் நெல்லியடி பொலிஸ்நிலையத்தில் பாரப்படுத்தப்பட்டுள்ளன. (ஸ்ரீ-3-24)




## குப்பை தொட்டிகள் நிரம்பி வழிகின்றன

(வல்வெட்டித்துறை)

வல்வெட்டித்துறை நகராட்சி மன்றத்திற்குட்பட்ட பிரதேசங்களிலுள்ள குப்பைத் தொட்டிகளில் குப்பை நிரம்பிக் காணப்படுகிறது. இதனால் சுகாதார சீர்கேடுகள் நிலவி வருதுடன் நோய்கள் ஏற்படக்கூடிய அபாயம் காணப்படுகிறதோடு மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர். எனவே இது விடயத்தில் உரியதரப்பினர் நடவடிக்கை எடுத்து உதவுமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஸ்ரீ-3-63)

## கனரக வாகனத்தில் சிக்கிய மின்வயர் மின்கம்பம் சரிந்து வீழ்ந்தது



(யாழ்ப்பாணம்)

தபால்பெட்டி சந்தியில் கனரக வானமொன்றின் மேற்பகுதி மின்சார வயர்களில் சிக்குண்டு வேகமாக இழுத்துச் செல்லப்பட்டதால் மின் கம்பம் வீதிக்குக் குறுக்கே சரிந்து விழுந்தது.

இச்சம்பவம் நேற்றுப்பிற்பகல் 4.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது. தனியாருக்குச் சொந்தமான கனரக வாகனமொன்று தபால் பெட்டிச்சந்தி முதலாம் ஒழுங்கையை நோக்கி திரும்பிய வேளையில் அவ்வாகனத்தின் மேற் பக்கம் மின்சார வயர்களில் சிக்குண்டது. இதன் காரணமாக மின் மார்க்க வயர்கள் இதனுள் இழுபட்டு சென்றமையால் மின் கம்பம் கீழே சரிந்து விழுந்தது.

இதனால் சம்பவம் ஏற்பட்ட நேரத்தில் இருந்து அப்பகுதிக்கு மின்சாரம் நிறுத்தப்பட்டுள்ளது. தொலைத் தொடர்பு வயர்களும் அறுந்துள்ளமையால் கேபிள்தொலைபேசிகளும் செயலிழந்துள்ளன.

இச்சம்பவத்தால் அப்பகுதி போக்குவரத்து தடைப்பட்டு மக்கள் மாற்றுப்பாதையினை பயன்படுத்தியிருந்தனர். இந்நிலை பற்றி மின்சாரசபைக்கு அறிவிக்கப்பட்டதை தொடர்ந்து மின்சார சபையினர் அவ்விடத்துக்கு விரைந்து இவற்றை சீர்செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2,4)

## இன்னிசைக் கதாப்பிரசங்கம்

(யாழ்ப்பாணம்)



காரைநகர் பயிரிக்கூடல் ஸ்ரீ சிவசுப் பிரமணிய சுவாமி கோவில் கொடியேற்றத் திருவிழா எதிர்வரும் 10 ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

அன்றைய தினம் மாலை 6.30 மணிக்கு சிறப்பு நிகழ்ச்சியாக இன்னிசை கதாப்பிரசங்கம் ஆலய மண்டபத்தில் நடை பெறவுள்ளது.

இக்கதாப்பிரசங்க நிகழ்வில் கலாநிதி. க.நாகேஸ்வரன், கலாவித்தகர் சி.சிவஞானராஜா, ஆகியோர் "முருகன் பெருமை" என்னும் கருப்பொருளில் சங்கீத கதாப் பிரசங்கத்தை நிகழ்த்தவுள்ளனர்.

இந்நிகழ்வில் வயலின் கலாவித்தகர். கி.பத்மநாதன், மிருதங்கம் கலாவித்தகர் ப.சியாமகிருஸ்ணன், முரசில் கலாவித்தகர் ந.சசீஸ்குமார் ஆகியோர் அணிசெய் கலைஞர்களாக பங்குபற்றவுள்ளனர்.

எனவே இந்நிகழ்வில் அனைவரையும் கலந்து கொள்ளும்படி ஆலய நிர்வாகத்தினர் அழைப்பு விடுத்துள்ளனர். (ஸ்ரீ-4)



யாழ்ப்பாண பல்கலைக்கழக பொருளியல் துறையின் ஏற்பாட்டில் நேற்று நடைபெற்ற கருத்தரங்கில் இந்தியாவின் தமிழ்நாடு பாண்டிச்சேரி பல்கலைக்கழக பீடாதிபதி பேராசிரியர் எம்.சம்பந்தன், அப் பல்கலைக்கழக காந்திகல்வி நிறுவன இயக்குநர் பேராசிரியர் எம்.மூர்த்தி, யாழ். பல்கலைக்கழக பொருளியல் துறைத் தலைவர் வி.பி.சிவநாதன் ஆகியோர் உரையாற்றுவதையும் நிகழ்வில் கலந்துகொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:-எஸ்.கரன்)

# அரசாங்கத்திற்கு எதிராக வலுவான எதிரணி கூட்டணிக்கு மனோகணேசன் அழைப்பு

(கொழும்பு)

எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தல்களுக்கு முகங்கொடுப்பதற்காக வலுவான எதிர்க்கட்சிகளின் கூட்டணிகள் தென்னிலங்கையிலும் வடகிழக்கிலும் உருவாக்கப்படுவதன் மூலமாகவே இந்த அரசாங்கத்தை வீட்டிற்கு அனுப்பும் பணியை துரிதப்படுத்தப்பட முடியும் என ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர் மனோகணேசன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மனோகணேசன் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இந்த அரசாங்கத்தை தனியொரு கட்சியாலோ அல்லது தனியொரு அரசியல் தலைவராலோ வீழ்த்த முடியாது. அனைத்து எதிர்க்கட்சிகளும் ஒன்று சேர்ந்து வலுவான கூட்டணி தென்னிலங்கையிலே உருவாக்கப்படவேண்டும். அத்தகைய கூட்டணி தமிழ் பேசும் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் முகமாக வடகிழக்கிலும் உருவாக்கப்பட வேண்டும். கடந்த ஜனாதிபதி தேர்தலின் போது பொதுச் சின்னத்திலே எதிர்க்கட்சிகள் சார்பாக பொது வேட்பாளரை நிறுத்தியிருந்தோம்.

இந்த எதிர்க்கட்சிகளின் பொது கூட்டணி பாராளுமன்ற தேர்தலில் தொடரவில்லை. பாராளுமன்ற தேர்தலில் இந்த எதிர்க்கட்சிகளின் பொதுக்கூட்டணி இருந்திருக்குமானால் இந்த அரசாங்கத்திற்கு இந்த அளவிற்கு பெரும்பான்மை ஆசனங்கள் கிடைத்திருக்காது. அதை பயன்படுத்தி கணிசமான எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களை அரசாங்கத்தினால் வளைத்துப்போட்டிருக்கவும் முடியாது.

பாராளுமன்ற தேர்தலின் போது எதிர்க்கட்சிகள் பொதுச் சின்னத்திலே கூட்டணியாக போட்டியிட வைப்பதற்கு இறுதிக்கட்டம் வரை நாம் கடுமையான முயற்சிகளை எடுத்தோம். ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், ஜே.வி.பி. தலைவர்களுடன் இணைந்து நான் இந்த முயற்சிகளை எடுத்திருந்தாலும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையின் பிடிவாதம் காரணமாக இது சாத்தியமாகவில்லை. இதுவே இன்றைய அரசாங்கத்திற்கு மிகவும் சாதகமாக அமைந்துவிட்டது.

எனவே பொது எதிர்க்கட்சிகளின் கூட்டணி உருவாக்கப்பட வேண்டியதன் அவசியம் தொடர்பில் நான் இன்று ஐக்கிய தேசியக்கட்சி, ஜனநாயக தேசியக்கூட்டணி, ஜே.வி.பி. ஆகிய கட்சி தலைவர்களுக்கு கடிதங்களை அனுப்பியுள்ளேன்.

இத்தகைய தொடர்புகளை சிறிதுங்க ஜயசூர்ய, விக்ரமபாகு கருணாரட்ன ஆகியோருடனும் ஏற்படுத்தியுள்ளேன். அதுபோல இன்னும் சில தினங்களில் தமிழ் தேசியக்கூட்டமைப்பு மற்றும் ஏனைய தமிழ் தேசிய தலைவர்களை சந்திப்பதற்கும் நமது கட்சி விரும்பியுள்ளது.

இந் நிலையில் பொதுச் சின்னத்தில் போட்டியிடக்கூடிய பொதுவான எதிர்க்கட்சி கூட்டணி உருவாக்கப்படுவதன் மூலமாகவே அரசாங்கத்திற்கு எதிராக இன்று சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் மத்தியில் எழுந்து வருகின்ற எதிர்ப்பு அலையை நாம் ஒருமுகப்படுத்த முடியும்.அதன் மூலம் மக்களுக்கு நம்பிக்கையை தரமுடியும்.

பொது கூட்டணி தொடர்பில் எதிர்க்கட்சிகள் உடன்பாட்டுக்கு வராவிட்டால் ஜனநாயக மக்கள் முன்னணி கொழும்பு மாநகரசபை உட்பட பல உள்ளூராட்சி மன்றங்களில் தனித்து எமது கட்சியின் பிரபலமான ஏணிச் சின்னத்தில் போட்டியிடுவதையே நான் விரும்புகின்றேன். (ஸ்ரீ-2)

# கடல் விமானத் தளத்திற்கான திட்டம் தண்டுகம் ஓயாவிற்கு மாற்றம்

நீர்கொழும்பில் கடற்பரப்பில் அமைக்கப்படவிருந்த கடல் விமானத் தளத்திற்கான திட்டத்தினை தண்டுகம் ஓயாவிற்கு மாற்ற அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக மேல் மாகாண சபை அமைச்சர் நிமால் லான்ச தெரிவித்துள்ளார்.

நீர்கொழும்பு மீனவ சமூகத்தினரின் வேண்டுகோளுக்கு இணங்கவே இத்திட்டத்தை தண்டுகம ஓயாவிற்கு மாற்ற தீர்மானிக்கப்பட்டுள்ளதாக நிமால் லான்ச குறிப்பிட்டுள்ளார்.

ஆயினும் இதுவரை இது குறித்த இறுதிக் கட்ட முடிவு எடுக்கப்படவில்லை எனவும் மீனவர் சமூகத்திற்கு பாதகம் இல்லாதவாறு இது குறித்து இவ்வாரம் நாடாளுமன்றத்தில் கலந்துரையாடப்படவுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ)

# 20 வருடங்களின் பின் சனசமூக நிலையம் மீள ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

கடந்த 20 வருடங்களாக இயங்காதிருந்த புன்னாலைக்கட்டுவன் வடக்கு ஸ்ரீ துர்க்கா சனசமூக நிலையம் கடந்த சனிக்கிழமை மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த 1960 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இச் சனசமூக நிலையம் உயர் பாதுகாப்பு வலயத்தை அண்டிய பகுதியில் அமைந்திருப்பதால் கடந்த 1990 ஆம் ஆண்டுக்குப் பின்னர் இயங்காதிருந்தது. கடந்த மூன்று மாதங்களுக்கு முன் இப் பகுதியில் மீளக் குடியமர இராணுவத்தினரால் அனுமதி வழங்கப்பட்டதைத் தொடர்ந்து கடந்த முதலாம் திகதி இச் சனசமூக நிலையம் ஆரம்பிக்கப்பட்டு புதிய நிர்வாக சபை தெரிவு செய்யப்பட்டது.

இதில் தலைவராக செ.வசீகரன், செயலாளராக இ.கெங்காதரன், பொருளாளராக ந. செல்வரத்தினம், உப தலைவராக ந.நவராஜன், உப செயலாளராக கு.சந்திரதாஸ் ஆகியோரும் 17 பேர்கொண்ட நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டுள்ளது. (ஸ்ரீ)


## அகமகிழ்ந்து வாழ்த்துகிறோம்



திரு.பொன்னம்பலம் ஞானதேசிகன்
B.A. Dip.In. ED. M.Ed.SL.P.S
பிரதி அதிபர் யா/ யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி

புகழ் பூத்த யாழ்ப்பாண இந்துக்கல்லூரியில் 1989 ஆம் ஆண்டுமுதல் பகுதித்தலைவராக பணி நிலைகளில் அர்ப்பணிப்போடு கடமையாற்றி இன்று கல்லூரியின் பிரதி அதிபராக உயர்ந்து நிற்கும் எங்கள் பல்கலைக்கழக தோழனை அகமகிழ்ந்து வாழ்த்துவதோடு மேலும் பல பதவி உயர்வுகள் பெறவேண்டுமென யாழ்.இந்துக் கல்லூரி குலதெய்வமான ஞானவைரவரை வணங்கி வாழ்த்துகிறோம்.

நண்பர்கள்,
[அதிபர்கள்]

[சி-2050]



## University of Jaffna, Sri Lanka
## Faculty of Graduate Studies

### Registration For Postgraduate Courses
### M.Phil & Ph.D- 2011/ 12

Applications are invited from qualified persons for enrollment to the Master of philosophy (M.Phil) and Doctor of Philosophy (Ph.D) Degree Programmes offered by the Faculty of Graduate Studies, University of Jaffna in the disciplines listed below.

- Agriculture
- Geography, Economics and Political Science
- History
- Tamil, Sanskrit and Linguistics
- Botany, Zoology and Biochemistry
- Commerce and Management
- Physiology, Medicine and Siddha Medicine
- Physics, Chemistry, Computer Science and Maths & Stats
- Hindu Civilization, Christian Civilization and Philosophy


Relevant information and prescribed application forms can be obtained from the Assistant Registrar, Faculty of Graduate Studies, University of Jaffna (T.P:0212223608) on production of a receipt in support of a payment of Rs.500/- to the University Account number **162-1-001-6-0000880** at the People's Bank, University Branch, Thirunelvely or forwarding a money order of Rs. 500/- drawn in favour of ***"The Bursar,*** University of ***Jaffna"***. Requests by post should be accompanied by a self-addressed envolope not less than 22.5x 10c.m.(9"x4") in size affixing stamps to the value of Rs.40/=.

Duly completed applications should be sent to the Assistant Registrar, Faculty of Graduate Studies on or before 15th feb 2011. Late and incomplete applications will not be considered.

For further details please contact with the Faculty of Graduate Studies, University of Jaffna.

Registrar
03.01.2011

(C-2049)



வடமாகாண கல்வித் திணைக்களத்தின் கல்வி அபிவிருத்தி திணைக்கள அதிகாரி தி.வை.சிறிஸ்கந்தராஜா தலைமையிலான குழுவினர் நேற்று யா/முத்துத்தம்பி மகாவித்தியாலயத்திற்கு திடீர் விஜயம் ஒன்றை மேற்கொண்டனர். இங்கு விஜயம் செய்த குழுவினர் கல்வி கற்றல் மற்றும் நிர்வாக செயற்பாடுகளை ஆராய்வதையும் மாணவர்களின் செயற்பாடுகளைப் பார்வையிடுவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:-என்.குமார்.)

# வெள்ளைப்பூண்டுக்குள் தங்கத்தை கடத்தியவருக்கு அபராதம்

(கொழும்பு)

வெள்ளைப்பூண்டுக் குவியலுக்குள் இருந்து தங்கக் கட்டிகள் கண்டெடுக்கப்பட்ட சம்பவமொன்று நேற்றுக்காலை கட்டுநாயக்க விமான நிலையத்தில் நடைபெற்றுள்ளது.

கொழும்பிலிருந்து இந்தியா செல்வதற்காக விமான நிலையம் வந்திருந்த விமானப் பயணியொருவர் தன்னுடன் வெள்ளைப் பூண்டு ஒரு தொகையையும் எடுத்துச் செல்ல முற்பட்டுள்ளார். அவரது நடத்தையில் சந்தேகம் கொண்ட சுங்க அதிகாரிகள் அதனை பரிசோதனைக்குட்படுத்தியபோது அதற்குள்ளிருந்து ஏழு தங்கக் கட்டிகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

கண்டெடுக்கப்பட்ட தங்கக் கட்டிகளின் பெறுமதி பதின்மூன்று இலட்சம் ரூபாவாகும். தற்போது அவை அனைத்தும் பறிமுதல் செய்யப்பட்டு அரசுடைமையாக்கப்பட்டுள்ளன.

தங்கத்தைக் களவாக எடுத்துச் செல்ல முற்பட்டவருக்கும் சுங்கத்திணைக்களத்தின் உதவி ஆணையாளர் மகேஷ்வரன் ஒரு இலட்சம் ரூபா அபராதம் விதித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ-2)

# அரசாங்க வைத்தியசாலைகளில் சிகிச்சை பெறும் குடிமகன்களிடம் கட்டணம் அறவீடு

## பெப்ரவரி முதல் அமுல்

(கொழும்பு)

மதுபாவனையினால் நோயுறும் அல்லது விபத்துக்குள்ளாகி அரச வைத்தியசாலையில் சிகிச்சை பெறுவோரிடம் கட்டணங்களை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த நடைமுறையானது எதிர்வரும் பெப்ரவரி மாதம் முதலாம் திகதியில் இருந்து அமுல்படுத்தப்படவுள்ளது.

இந்த விபரங்கள் அடங்கிய சுற்று நிரூபம் இன்னும் இரண்டு வாரங்களில் அனைத்து அரச வைத்தியசாலைகளுக்கும் அனுப்பி வைக்கப்படுமென சுகாதார அமைச்சர் மைத்திரி பால சிறிசேன் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு மதுபாவனையினால் நோயுறும் அல்லது விபத்துகுள்ளாகுவோருக்காக சிகிச்சை அளிப்பதில் அரசாங்கம் பாரிய நிதியினை செலவிட்டு வருவூதாகவும் அரசாங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

இந்த நிதியினை சேமித்து வைத்தால் அதனை வேறு அபிவிருத்தி தேவைகளுக்காகப் பயன்படுத்த முடியுமென அரசு தெரிவித்துள்ளது.

நல்லதொரு சமுதாயத்தை உருவாக்க வேண்டுமாயின் வைத்திய சுகாதார ஆலோசனைகளுக்கு அப்பால் பல்வேறு சந்தர்ப்பங்களில் அரசியல் முடிபுகளையும் எடுக்க வேண்டியுள்ளதாக அரசாங்கம் சுட்டிக் காட்டியுள்ளது. (ஸ்ரீ-2)

# கட்டுநாயக்க விமான நிலையத்தில் 30 நாள் சுற்றுலா விசா நிறுத்தம்

சுற்றுலா விசா மூலம் நாட்டுக்குள் பிரவேசிக்கும் வெளிநாட்டவர்கள் அரச விரோத செயற்பாடுகளில் ஈடுபட்டு வந்தமை குறித்த பல சம்பவங்கள் பற்றி தெரியவந்ததால் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வழங்கப்படும் 30 நாட்களுக்கான சுற்றுலா விசா வழங்குவது நிறுத்தப்பட்டதாக சிரேஷ்ட பாதுகாப்பு அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

பிரித்தானியாவின் சனல் 4 தொலைக்காட்சியின் செய்தியாளர் ஜெனத்தன் மில்லர் சுற்றுலா விசா மூலம் நாட்டுக்குள் திருட்டுத்தனமாக நுழைந்து போர் குற்றங்கள் தொடர்பான போலியான சாட்சியங்களை சேகரித்ததாகவும் அரச சார்பற்ற நிறுவனங்கள் பல சுற்றுலா விசாக்கள் மூலம் இலங்கைக்கு எதிரானவர்களை வரவழைத்திருந்ததாகவும் அந்த அதிகாரி குறிப்பிட்டுள்ளார்.

சுற்றுலாப் பயணிகள்போல் வரும் வெளிநாட்டு சூழ்ச்சியாளர்கள் நாட்டுக்குள் வருவதை தடுக்க பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ சில மாதங்களுக்கு முன்னர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வழங்கப்படும் 30 நாட்களுக்கான சுற்றுலா விசாவை நிறுத்துமாறு யோசனை முன்வைத் திருந்தார்.

இதனை வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் உயர் அதிகாரியொருவர் எதிர்த்ததாகவும் குறித்த பாதுகாப்பு அதிகாரி மேலும் கூறியுள்ளார்.

இந்த நிலையில் சுற்றுலா விசா அனுமதியில் நாட்டுக்குள் பிரவேசித்திருந்த வெளிநாட்டு புலனாய்வு துறையொன்றின் அதிகாரியொருவர் விகாரமஹாதேவி பூங்காவிற்கு அருகில் வைத்து சிக்கியதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறாயினும் இலங்கைக்கு வரும் சுற்றுலாப் பயணிகள் இணையத்தின் மூலமாக விசா அனுமதியை பெற விண்ணப்பிக்க முடியும். விசா அனுமதிகள் ஒரு நாள் ஆய்வுகளின் பின்னர் வழங்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (2)

# ரட்ணசிறி விக்ரமநாயக்கவை கட்சியில் இணைத்துக் கொள்வதற்கு விருப்பம்

## ஐ.தே.க. தெரிவிப்பு

முன்னாள் பிரதமரும் தற்போதைய சிரேஷ்ட அமைச்சர்களில் ஒருவருமான ரட்ணசிறி விக்ரமநாயக்கவை கட்சியில் இணைத்துக்கொள்ள விரும்புவதாக ஐக்கிய தேசியக் கட்சி அறிவித்துள்ளது.

அரசாங்கத்தின் உண்மை நிலைமைகள் குறித்து விமர்சனம் செய்ததனைத் தொடர்ந்து ரட்ணசிறி விக்ரமநாயக்க மீது பலர் குற்றச்சாட்டுக்களை சுமத்தி வருவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் ஹொரண அமைப்பாளர் ரவி ஜயவர்தன தெரிவித்துள்ளார்.

அவரை கட்சியிலிருந்து நீக்குமாறு சிலர் வலியுறுத்தி வருவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இவ்வாறான ஓர் பின்னணியில் அவருக்காக தமது அமைப்பாளர் பதவியைக் கூட விட்டுக்கொடுக்கத் தயார் என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

ரட்ணசிறி விக்ரமநாயக்க பிரதமராக கடமையாற்றிய காலத்தில் பல்வேறு நன்மைகளை பெற்றுக்கொண்ட நபர்கள் இன்று கடுமையான விமர்சனங்களை வெளியிட்டு வருவதாகவும் அவர் தமக்காக குரல் கொடுக்கவில்லை எனவும் அதிருப்தி அடைந்துள்ள கட்சி உறுப்பினர்களின் சார்பில் அவர் குரல் கொடுத்ததாக சுட்டிக்காட்டியுள்ளார்.

மக்கள் அரசாங்கத்தின் மீது அதிருப்தி கொண்டுள்ளதாகவும் எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களின் போது இந்த அதிருப்தி நிலைமை வெளிப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

# போலி ஏ.ரி.எம்.அட்டைகளைப் பயன்படுத்தி பண மோசடியில் ஈடுபட்டவர்கள் கைது

போலியான ஏ.ரி.எம். அட்டைகளைப் பயன்படுத்தி கோடிக்கணக்கில் கொள்ளையடித்த இரண்டு இளைஞர்களைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பிரஸ்தாப இளைஞர்கள் இருவரும் காலிப் பிரதேசத்தில் வைத்தே பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களிடமிருந்த ஏராளமான போலி ஏ.ரி.எம்.அட்டைகள் மற்றும் கைத்துப்பாக்கியொன்று என்பனவும் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளன.

ஏ.ரி.எம். அட்டைகளின் தகவல்கள் மற்றும் அவற்றின் இரகசிய இலக்கங்கள் என்பவற்றை சூட்சுமமான முறையில் திருடி ஏராளம் போலி அட்டைகளை அவர்கள் தயாரித்துக்கொண்டே அவர்கள் கொள்ளைகளை மேற்கொண்டு வந்துள்ளமை தெரிய வந்துள்ளது.

கொழும்பு தொடக்கம் காலி வரையிலான அரச மற்றும் தனியார் வங்கிகளிலிருந்தே அவர்கள் அடுத்தவர்களின் வங்கிக் கணக்கிலிருந்து பெருந்தொகைப்பணத்தைக் கொள்ளையடித்துள்ளனர்.

ருமேனியாவைச் சேர்ந்த தம்பதியொன்றின் வழிகாட்டலின் பிரகாரமே அவர்கள் ஏ.ரி.எம்.அட்டைகளின் தகவல்களைத் திருடும் இயந்திரம் நுண்ணிய கமரா என்பவற்றைக் கையாளவும் அவற்றின் மூலமாகத் தகவல்களைத் திரட்டவும் பயின்றுள்ளனர். சந்தேக நபர்களான ருமேனியத் தம்பதி தலைமறைவாகியுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

கைது செய்யப்பட்டவர்களிடமிருந்து இருபத்து ஐயாயிரம் யூரோக்கள் மற்றும் நான்கு இலடச்த்துக்கிட்டிய இலங்கை நாணயம் என்பனவும் கைப்பற்றப்பட்டுள்ளன. (ஸ்ரீ-2)

# இலங்கையின் சகல பாகங்களிலும் சனத்தொகை மதிப்பீடு நடத்தப்படவுள்ளது

நாடு தழுவிய ரீதியில் சனத்தொகை மதிப்பீடு மேற்கொள்ளப்பட உள்ளதாக இலங்கை சனத்தொகை மற்றும் புள்ளி விபரவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

கடந்த 2009 ஆம் ஆண்டு யுத்தம் நிறைவுக்குக் கொண்டு வரப்பட்டதன் பின்னர் முதற் தடவையாக இலங்கையின் சகல பாகங்களையும் உள்ளடக்கும் வகையில் சனத்தொகை மதிப்பீடு மேற்கொள்ளப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

முப்பது வருடங்களின் பின்னர் முழு அளவில் சனத்தொகை மதிப்பீடு மேற்கொள்ளப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. வடக்கு-கிழக்கு வரைபடங்களை உருவாக்கும் பணிகள் எதிர்வரும் மார்ச் மாதத்திற்கு முன்னதாக பூர்த்தியாகும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

1871 ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு பத்து ஆண்டுக்கு ஒரு தடவையும் சனத்தொகை மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.


கடந்த சில காலமாக மேற்கொள்ளப்பட்ட சனத்தொகை மதிப்பீடுகளின் போது 25 மாவட்டங்களில் 18 மாவட்டங்களில் மட்டுமே சனத்தொகை மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இவ்வாண்டின் மூன்றாம் காலாண்டுப் பகுதியில் சனத்தொகை மதிப்பீடு மேற்கொள்ளப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. நாட்டின் தற்போதைய சனத்தொகை 20.6 மில்லியன் என மதிப்பிடப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# கள்ளிக்காட்டு இதிகாசம்



11



**கவிப்பேரரசு வைரமுத்து**

சத்தத்தில் விழித்தன சகல கரைகளும் ஆங்காங்கே ''டார்ச்சு'' களும் விழித்துக்கொண்டன. சலம்பல் வந்த இடம் நோக்கித் தண்ணீரில் குதித்தான் ஒரு காவல்காரன். நீந்தி நெருங்க நெருங்க-தத்தளிப்பவன் ''பொடியன்'' என்று புரிந்தது.

"ஏலே நீ யாரு பயடா? கால் தவறி விழுந்திட்டியா?" என்று வினாத் தொடுத்துக்கொண்டே விரைந்தவன் கிட்டப் போய்ச் சிறுவனின் தலைமுடி பிடித்துத் தூக்கினான்.அவன் திமிறினான்; போராடினான். தண்ணீரில் விழுந்தவனைக் காப்பாற்ற வேண்டும் என்றால் மூழ்கிக் கிடப்பவனின் முகத்தில் குத்த வேண்டும் முதலில். அவனை மூர்ச்சையுறச் செய்ய வேண்டும். இல்லை என்றால் உயிர் காக்கும் பதற்றத்தில் காப்பாற்றப் போனவனையும் சேர்த்துத் தண்ணீருக்குள் இழுத்து விடுவான் தத்தளிப்பவன். அதையே செய்தான் காவல் காரன். மொக்கராசை மூக்கில் குத்தி மூர்ச்சை யாக்கித் தோளில் ஏற்றிக் கரை சேர்த்தான் காவல்காரன். முகத்தில் டார்ச் அடித்தான் ஒருவன்.

"ஏய்! நம்ம பேயத்தேவர் பேரன் மொக்கராசு. இப்பத்தானப்பா இவுக ஆத்தாளுக்குக்கூடக் கல்யாணம் ஆச்சு" இடுப்பில் கட்டியிருந்த கயிற்றைச் சாட்சி வைத்து அவன் தற்கொலைக்கு வந்தவன் என்பதை அனுமானித்து, தலைகீழாய்க் கவிழ்த்துத் தண்ணீர் கக்கவைத்து-பேயத்தேவர் வீட்டில் கொண்டு சேர்த்த போது ஊரே கூடி விட்டது.

"எந் தலையில கல்லத்தூக்கிப் போடத் தெரிஞ்சயேடா பாவி!" என்று அழகம்மாப் பாட்டி அலற "சின்னப்பய செய்யற காரியமாடா...?" என்று பேயத்தேவன் அவனைக் கட்டிக்கொண்டு கதற கள்ளிப் பட்டியின் அதிகாலை கறுப்பாகி விட்டது.

கடைசியில் பேயத்தேவர் முடிந்த முடிபு எடுத்தவராய், "ஒனக்கு ஒங்காத்தாதான்டா வேணும்....என் நெலத்தயே ஒச்சுக்காளைக்கு எழுதிக் குடுத்தாச்சும் ஒன்ன ஒங்க ஆத்தாகிட்டயே விட்டுட்டு வாரேன்- வாடா" ஆவேசமானார் பேயத்தேவர்.

நீர் வடிந்த உடம்பும் கண்ணீர் வடிந்த கண்களுமாய் மொக்கராசு தாத்தாவின் கைகளைப் பிடித்துப் குலுங்கிச் சொன்னான்; "என்னைக்கி என்னைவிட்டுப் போனாளோ அன்னைக்கே என் அத்தா செத்துப் போயிட்டா. இனி மேல் எனக்கு ஆத்தா வேணாம்; தாத்தா தான் வேணும்"-சட்டையில்லாத மார்போடு அவனைச் சேத்துக் கட்டிய பேயத்தேவன் சத்தம் போட்டு அழுதார். ஆடு மாடுகளும், கோழிகளும், குஞ்சுகளும், வேப்பமரக்கிளைகளில் கண்விழித்த காகங்களும் ஆச்சரியமாய்ப் பார்த்தன. பேயத்தேவருக்கு அழத் தெரியுமா?

ஆறாண்டுகளுக்குப் பிறகு தான் செல்லத்தாயி "மாச"மானாள். இந்த ஆறாண்டு காலத்தில் அவள் பட்டபாடும் பேயத்தேவரை படுத்தியபாடும் கொஞ்சநஞ்சமல்ல.

"ஏலா மூளி! எங்கலா ஒங்கப்பன் போடுற பத்துப் பவுனு. போலா.... போயி வாங்கி யாலா...." காமக்கா பட்டியில் அவன் சாட்டைக்கம்பில் சாத்துகிற சாத்தில் அவள் கள்ளிப்பட்டியில் வந்து விழுவாள்;அழுவாள். பேயத்தேவர் "வைச்சுக்கிட்டு வஞ்சகம் பண்ணவில்லையென்பது ஊருக்கெ தெரியும். ஒவ்வொரு முறை அவள் அழுது வரும் பொழுது ஒரு வாரம் வீட்டில் வைத்து அழுகையமர்த்தி, சோளமோ, சாமையோ, கல்லுப்பயறோ கானப் பயிறோ மூட்டை கட்டிக் "கானாவிலக்"கில் "கார்" (பஸ்) ஏத்தி விடுவார். ஐம்பதோநூறோ "அப்பப்ப"க் கொடுத்தனுப்புவார்.

அவளும் ஆரம்பத்தில் போராடித்தான் பார்த்தாள். "எங்கப்பன் காசில பொழைக்க நெனைக்கிறியே.... எங்கப்பனுக்கா பொறந்தா?" என்று கூடக் கேட்டு விட்டாள். மாட்டுக்குத் தவிடு அளந்து கொண்டிருந்த அரைப்படி நாழியைத் தவிட்டோடு அவளை நோக்கி வீசியடித்ததில் புருவத்தில் ரத்தம் ஒழுகப் பொழுதுக்கும் மூச்சுப் பேச்சில்லாமல் கிடந்ததே மிச்சம். "ஒத்துவாழவும் முடியல "இரண்டாம் பொழப்பும் இப்படியாச்சேன்னு" ஊருவையுமே..... அதனால அத்துவாழவும் முடியல. வயித்துல துணி யக் கட்டிக்கிட்டேன். வாயில பூட்டுப் போட்டுக் கிட்டேன். ஈசுவரன்விட்ட வழின்னு எப்படியோ கெடக்கேன்" இதுதான் அவள் தாம்பத்தியத்தில் சில வருடங்களாய் வார்த்தை மாறாத வாக்குமூலம்.

எப்படி இருந்தவள் செல்லத்தாயி.... சும்மா சாதிக்குதிரை மாதிரி. இன்றைக்கு அவளுக்கு வயிறு இருக்கிறதே தவிர மேனி இல்லையே. வாயும் வயிறுமாய் உள்ளவளுக்கு வாய்க்கு ருசியாக ஏதாச்சும் பண்ணிப்போட வேண்டியதுதான்.

"முருகாயி.....அந்த வெடக்கோழியப்புடிச்சு வை. நான் ஒரு எட்டு ஆண்டிபட்டிக்குப்போயி "அர சிலவு" சாமான் வாங்கிட்டு விசுக்குன்னு வந்திட றேன். ஏலே மொக்க! நீ ஏர ஒட்டிக்கிட்டுப் போயி அந்தக் "கொற ஒவழுவ" உழுது முடிச்சு வீடுவந்து சேர்றா?"


மேல்சட்டை தேடினார் பேயத் தேவர், போர் வீரன் போருக்குப் போகும்போது கவசம் அணிவது மாதிரி. "விசேசம்" என்றால் மட்டுமே சட்டை அணிவது பேயத்தேவர் வழக்கம். "கோழிச்சாறு" என்ற சந்தோஷம் அந்தக் குடும்பத்தில் பரபரவென்று பரவ ஆரம்பித்தது. நெல்லுச்சோறும் கோழிச்சாறும் தான் கள்ளிக்காட்டில் உயர்ந்தபட்ச உபசாரம்.ஒரு வீட்டில் கோழிச்சாறு கொதிப்பதே ஒரு கவுரவம்தான். கோழிக்குழம்பு என்பது அன்றாடமில்லை; அபூர்வம். ஒரு வீட்டில் நல்ல சோறு என்பது தைப் பொங்கலுக்கோ ஆடிக்கோ தீபாவளிக்கோதான். அல்லது ஆள் "சீக்கா"ய்க் கிடந்தாலும் அந்த மரியாதை கிடைக்கும். ஒரு பிள்ளைத்தாய்ச்சிக் குக் கோழிச்சாறு என்பது உணவு மட்டுமல்ல; மருந்தும்கூட.

பேயத்தேவர் சந்தைக்குப் போய்த்திரும்பும் "திருக்கோலம்" காணக் கண்ணிரண்டு போதாது. அரிசி, உப்பு, புளி, மொளகு, மொளகா, சீரகம், கடுகுளுந்தம் பருப்பு, கசகசா, பையில் - அது வலக்கையில். இடக்கையில் ஐந்துவிரல் இடுக்கில் நான்கு சீசா நல்லெண்ணெய்.... "சீமத் தண்ணி....." கடலெண்ணெய்.... தேங்காயெண்ணெய்...புளி மூடியிட்ட சீசாக்களின் கழுத்தில் சணல் கயிறு கட்டி சவுகரியம் செய்திருப்பார் விரலில் மாட்ட. வெவ்வேறு சைசுகளில் சீசாக்கள் இருப்பது மாதிரியே சீசாவின் எண்ணெய்களும் இருக்கும் வெவ்வேறு மட்டத்தில். சீமத் தண்ணியத் தவிர எல்லா எண்ணெய்களும் சீசாக்களின் அடிவாரங்களில் கிடக்கும். கட் டைச் செருப்பின் ஓசையும் சீசாக்கள் ஒன்றோட டொன்று முட்டிமுழங்கும் சத்தமும் "பேயத் தேவர் வாரேன்! பேயத்தேவர் வாரேன்!" என்று கானாவிலக்கிலிருந்து கள்ளிப்பட்டிக்கு அறிவிக்கும்.

"அழகம்மா மாதிரி கோழிக்குழம்பு வைக்க அஞ்சு சில்லாவிலும் ஆள் இல்லை" என்பது அவர் நம்பிக்கை. அழகம்மாள் என்றைக்குப் படுக்கையில் விழுந்தாளோ அன்று முதல் கோழிக் குழம்பு வைப்பது பேயத்தேவர்தான். வேறு யார் வைத்தாலும் "விளங்காது" அவருக்கு. அழகம்மா கைப்பதம் அவருக்கும் வரும்.

முருகாயி "கவுத்து" வைத்திருந்த "வெடக் கோழி"யை அறுத்து ரத்தத்தைத் தரையில் விட்டு "சாமிக்கு" என்றார்; "உசுர்" அடங்கி ஓய்ந்ததும் பறிக்க ஆரம்பித்தார். றெக்கை முடி மட்டும் கெட்டியாயிருந்தது. "செத்தபிறகு எதுக்கு இந்தப் புடி சாதகம்" என்று கோழியைத் திட்டினார். உள் இறக்கை, குறுமுடி ஒவ்வொன்றாய் நீக்கினார். செல்லத்தாயி தன்விருந்து தயாராவதை வேடிக்கை பார்த்துக்கொண்டேயிருந்தாள். அது ஒரு சொகம்.

சோளத்தட்டையில் வைக்கோல் பரப்பித் தீ மூட்டினார். வலக்கையால் கோழிக்கால் தூக்கிப் பிடித்து இடக்கையால் தீயைத் தள்ளிக் கோழியை வாட்டத்தொடங்கினார். கோழியின் சர்வ சருமங்களிலும் அனல் பரவுமாறு புரட்டிப் புரட்டி வாட்டினார். விரலுக்குச் சிக்காத குறுமுடிகள் கருகத் தொடங்கின. அந்தக் கருகல் வாசனையும் நாசிக்கு ருசிதான்.அனல் காட்டக்காட்ட, கலகலவென்று இருந்த கோழி கல்லாய் இறுகத் தொடங்கியது. வாட்டிய பதம் போதுமென்று சுயதிருப்தி வந்த பிறகு, குத்தவைத்திருந்த பேயத்தேவர் குதித்தெழுந்து,"முருகாயி..... அந்த மஞ்சளக் கொண்டா...." என்றார். கோழியின் கழுத் திலிருந்து கால் வரைக்கும் "அரைத்தமஞ்சள்" அப்பித் தடவி னார். கொஞ்சநேரம் காயவிட்டுக் கோழிக்கு "மஞ்சள் நீராட்டுவிழா" நடத்தினார். (வளரும்)



# 2011 புத்தாண்டு பலன்கள்

## உங்களுக்கு எப்படி?




**(உத்தராடம் 2, 3, 4ஆம் பாதங்கள், திருவோணம், அவிட்டம் 1,2 பாதங்கள்)**

***நினைத்ததை அடைய நிதானத்தைக் கடைப்பிடிக்கும் மகர ராசி நேயர்களே!***

புத்தாண்டு உங்களுக்குப் போதுமான அளவிற்குப் பொருளாதார வளர்ச்சியைக் கொடுக்கப்போகிறது. இதுவரை தேங்கிக் கிடந்த காரியங்கள் இனிச் சுறுசுறுப்பாக நடைபெறப் போகின்றன. இராசிநாதன் சனி யைக் குரு பார்ப்பதால் வருடத் தொடக்கத்தில் வருமானம் திருப்திகரமாக இருக்கும். குருப் பெயர்ச்சிக்குப் பின்னர் கொஞ்சம் யோசித்துச் செயற்படுவது நல்லது. அர்த்தாஷ்டம குருவாக வருவதால் பெரியவர்களைக் கலந்து ஆலோசித்து முடிவெடுத்தால் அது வெற்றி பெறும். பிரச்சினைகளுக்கு நீங்களாகவே முடிவெடுத்தால் அது திருப்திகரமாக அமையாது.

குருப்பெயர்ச்சிக்குப் பின்னர் இராகு-கேது பெயர்ச்சிஉருவாகிறது. அதன் பின்னர் 10ஆம் இடத்தில் சனி உச்சம் பெறுகிறார். இந்த சனிப்பெயர்ச்சி உங்களுக்குச் சாதகமாக அமையும். ஆண்டின் கடைசியில் அல்லவா சனிப் பெயர்ச்சியாகிறார். அதுவரை நாங்கள் எப்படிப் பொறுமையாக இருப்பது என்று நீங்கள் கேட்கலாம்.

நெஞ்சிற்கு நிம்மதி ஆண்டவன் சந்நிதி என்று கவியரசு கண்ணதாசன் சொல்லியிருக்கிறார். எனவே வழிபாடுகளை நீங்கள் முறையாக மேற்கொண்டால் வளர்ச்சியும், திருப்திகரமாக அமையும். வருமானப் பற்றாக்குறையும் ஏற்படாது. வருடத் தொடக்கத்தில் 6இல் கேதுவும், 12இல் இராகுவும் சஞ்சரிப்பதால் ஆதாயத்தில் முக்கால்பங்கு விரயமாகும் சூழ்நிலை உண்டு.

புத்தாண்டில் உள்ள கிரகநிலையின் கட்டத்தையும், உங்கள் சுயஜாதகத்தில் உள்ள கட்டத்தையும் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். அவை இரண்டும் இணைந்து செயற்பட்டால், துணிந்து காரியங்களைச் செய்யலாம். இல்லையேல் பணிந்து வணங்கிப் பரிகாரங்களைச் செய்வதே நல்லது.

உங்கள் இராசிநாதன் சனி. அவருக்குரிய ஆதிக்க எண் 8 ஆகும். இந்த எண் ஆதிக்கத்தில் பெயர் வைத்துக் கொள்ள எல் லோரும் பயப்படுவர். ஒரு சிலருக்கு எட்டு எண் ஆதிக்கம் வெற்றியை வழங்கும். எனவே உங் கள் சுய ஜாதகத்தில் சனி இருக்கும் நிலையை அறிந்து, அதன் பாதசார பலமறிந்து, அதற்குரிய கிரக எண்ணின் ஆதிக்கத்தில் உங்கள் பெயரையும், உங்கள் தொழில் நிலையத்தின் பெயரையும் வைத்துக் கொண்டால் வாழ்க்கைத் தேவைகள் பூர்த்தியாகும். வளர்ச்சியும் கூடும்.

முன்னோர்கள் செய்த செயலை அப்படியே செய்ய வேண்டும் என்று சொல்வீர்கள். எளிமையாக் இருப்பீர்கள். இனிமையாகப் பேசுவீர்கள். ஆனால், புதுமையை மட்டும் ஏற்றுக்கொள்ளத் தயக்கம் காட்டுவீர்கள். தானங்களில் சிறந்தது நிதானம் என்பதைத் தவறாமல் எடுத்துரைப்பீர்கள். எல்லா நெளிவு, சுழிவுகளையும் கற்று வைத்திருக்கும் நீங்கள், எதுவும் தெரியாதது போன்ற தோற்றத்தில் இருப்பீர்கள். உங்களுக்கு இந்தப் புத்தாண்டில் உலாவரும் கிரக நிலைகள் எப்படியெல்லாம் சந்தர்ப்பத்தையும், சாதகத்தையும் வழங்கும் என்பதைப் பற்றிப் பார்ப்போம்.

### 01.01.2011 முதல் 07.05.2011 வரை

இக்காலத்தில் குரு மூன்றாமிடத்தில் சஞ் சரித்து உங்கள் இராசிக்கு 7, 9, 11 ஆகிய இடங்களைப் பார்க்கிறார். தளராத மனதிற்குச் சொந்தக்காரராக விளங்கும் உங்களுக்கு, குரு பார்வை வசதி வாய்ப்புகளை பெருக்கிக்கொடுக்கும். வரன்களை வரவழைத்துக் கொடுக்கும். விலகிச் சென்ற வாழ்க்கைத்துணை வழியே வந்த பிரச்சினை அகலும். தந்தையின் முன்னேற்றம் அதிகரிக்கும். பூர்வீக சொத்து, இடங்களில் இருந்த வில்லங்க்ங்கள் விலகும்.

இலாப ஸ்தானத்தைக் குரு பார்ப்பதால், உத்தியோகத்தர்களுக்குப் பதவி உயர்வும், ஊதிய உயர்வும் ஏற்படும். இளைய சகோதரத்தால் ஏற்பட்ட பிரச்சினை அகலும். எதிர்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் ஒன்றிரண்டாக வெற்றிபெறும். குடும்ப உறுப்பினர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வீர்கள். நீண்டநாள் பாக்கிகள் வசூலாகும்.

### 08.05.2011 முதல் 31.12.2011 வரை

இக்காலத்தில் குரு அர்த்தாஷ்டம குருவாக சஞ்சரிக்கப் போகிறார். அர்த்தாஷ்டம சனியைப் போலவே, அர்த்தாஷ்டம குருவும் திடீர், திடீரென மாற்றங்களைக் கொடுக்கும். உடல் ஆரோக்கியத்தில் ஒவ்வாமை நோய் குடியேறும். கடன் சுமை கட்டுக்கடங்காமல் இருப்பவர்களுக்குப் பூர்வீக சொத்துக்களை விற்றுப் பொருளாதார நெருக்கடியைச் சமாளிக்கும் சூழ்நிலை ஏற்படும்.

நம்பிக்கைக்கு உரியவர்களிடம் ஒப்படைத்த பொறுப்பு நிறைவேறும் என்றாலும், ஏமாற்றங்களையும் சில சமயங்களில் சந்திக்க நேரிடும். தொழிலில் கூடுதல் விழிப்புணர்ச்சி தேவை. கூட்டாளிகளின் ஜாதகத்தை ஆராய்ந்து, உங்களுக்கு ஒத்து வருமானால் அவர்களோடு இணைந்து செயற்படலாம். இல்லையேல், இருக்கும் இடத்திலேயே இருப் பது நல்லது.

வீட்டை விஸ்தரிப்புச் செய்ய நினைத்து, பல வருடங்களாகியும் செய்ய இயலவில்லையே என்ற கவலை அகலும். இடம் வாங்கி மனை கட்டும் யோகமும் அல்லது கட்டடமாக வாங்கிக் குடியேறும் யோகமும் உங்களுக்கு அமையலாம். அப்படி அமையும் பொழுது, வாஸ்து நன்றாக இருக்கிறதா என்று ஆராய்ந்து கொள்ளுங்கள். அங்ஙனம் வாஸ்து சரியாக இருந்தால்தான் வளர்ச்சி மேலோங்கி இருக்கும்.

வெளிநாட்டு முயற்சிகளில் ஈடுபடுவோர், அந்நியர்களை நம்பிச் செயற்படும் பொழுது ஒருகணம் யோசிப்பது நல்லது. அர்த்தாஷ்டம குருவின் ஆதிக்கம் அதிகரிக்கும் இந்த நேரத்தில் குருவிற்குரிய சிறப்பு தலங்களுக்குச் சென்று அபிஷேக ஆராதனைகள் செய்து வருவது நல்லது. வானவர்க்கு அரசனான வளம் தரும் குருவே என்ற கவசம் பாடி இனிப்பு நைவேத்யம் வைத்து, மஞ்சள் வஸ்திரமும், முல்லைப்பூ மாலையும் அணிவித்து திசைமாறிய தென்முகக் கடவுளை வழிபட்டால் சிறப்பான வாழ்க்கை உங்களுக்கு அமையும்.

### இராகு -கேது பெயர்ச்சிக்காலம்

மே 16ஆந் திகதி விருச்சிக இராசியில் இராகுவும், ரிஷப இராசியில் கேதுவும் சஞ்சரிக்கப் போகிறார்கள். இலாபஸ்தானத்தில் இராகுவும், 5ஆம் இடத்தில் கேதுவும் சஞ்சரிக்கும் இந்த நேரத்தில், வருமானம் திருப்திகரமாக இருக்கும். புதிய ஒப்பந்தங்கள் அதிகரிக்கும். தொழில் வளர்ச்சிக்காக தொகை கேட்டு விண்ணப்பித்து இருந்தவர்களுக்கு, அரசு வழியிலும் வரவு வந்து சேரும்.

அந்நியர் வழியிலும் வரவு வந்து சேரும். உரசிப் பார்க்கும் தங்கத்தைப் போன்ற உள்ளம் பெற்ற உங்களுக்கு மூத்த சகோதரர்களால் ஏற்பட்ட முட்டுக்கட்டைகள் அகலும்.


5ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் கேது இனி ஆச்சரியப்படும் விதத்தில் வாழ்க்கையை அமைத்துக் கொடுக்கும். உங்களை விட்டு விலகிய நண்பர்கள் வந்திணைவர். பெண் வழிப் பிரச்சினைகள் அகலும். சொத்துத் தகராறுகளை பஞ்சாயத்து மூலம் தீர்த்துக் கொள்வீர்கள். கல்யாண வாய்ப்புக்காக எடுத்த முயற்சி கைகூடுவதற்கான அறிகுறிகள் தோன்றும். ஜாதகப் பொருத்தம் பார்த்து வாழ்க்கைத்துணையைத் தேர்ந்தெடுத்துக் கொள்வது நல்லது.

கணம், மகேந்திரம், இராசி அதிபதி, ரஜ்ஜு போன்ற பொருத்தங்கள் எல்லாம் நன்றாகப் பொருந்தி இருப்பதால், குணத்தோடு கூடிய வாழ்க்கைத் துணை அமையும். வாழ்க்கைப் பிரச்சினையும் ஏற்படாது. இராகு-கேது ப்ரீதிகளைச் செய்ய வேண்டிய நேரமிது.

புத்தாண்டில் பொருளாதார வளம் பெருகவும், போற்றும் அளவிற்கு வாழ்க்கைத் தரம் உயரவும், கைலாசநாதரை வழிபட்டு நிகழ்காலத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளுங்கள். பிரதோஷ வழிபாடு உங்களுக்கு பெருமை சேர்க்கும்.

**சிவல்புரிசிங்காரம்**

நவம்பர் 21ஆம் திகதி துலாம் ராசியில் சனி உச்சம் பெறப்போகிறது. அது உங்களுக்கு நன்மையையே வழங்கும். முத்தான வாழ்க்கையை அமைத்துக் கொடுக்கும். தொழிலை வளப்படுத்தும். பெற்றோர் வழிப் பிரச்சினை நல்ல முடிவிற்கு வரும். தூர தேசத்தில் இருந்து வரும் அழைப்புகள் உங்கள் தொழிலுக்கு உறுதுணையாக இருக்கும். அரசியலில் ஈடுபட்டு இருப்பவர்களுக்கு அதிகாரத்துவ யோகம் செயற்படும். ***மந்தனாம் கரி, நீலா, மணி யான மகரவாசா! எந்த நாள் ஆனபோதும், இனிய நாள் ஆக மாற்று!*** என்று சனியின் சந்நிதியில் பாடினால் சந்தோஷங்கள் வந்து சேரும். (தொடரும்)





கைதடி நவீல்ட் செவிப்புலன் விழிப்புலனற்றோர் பாடசாலையில் கல்வி பயிலும் யுத்தத்தினால் அவயங்களை இழந்த 6 மாணவர்களுக்கு உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் அனுசரணையுடன் நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரனின் ஒழுங்குபடுத்தலில் தலா 25ஆயிரம் ரூபா நிதியுதவி வழங்கப்பட்டது. பாடசாலை அதிபரின் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் உதவித்தொகை வழங்கப்படுவதையும் அருகில் பாராளுமன்ற உறுப்பினர் சிறிதரன் நிற்பதையும் படங்களில் காணலாம்.

# தேங்காய் இறக்குமதி தற்காலிகமாக இடைநிறுத்தம்

இந்தியாவில் இருந்து தேங்காய் இறக்குமதி செய்யும் திட்டம் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தென்னை ஆராய்ச்சி சபை உள்ளிட்ட பல தரப்பினரால் வெளியிடப்பட்ட எதிர்ப்பைத் தொடர்ந்து இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. இந்தியாவின் கேரள மாநிலத்தில் இருந்து தோங்காயை இறக்குமதி செய்ய நுகர்வோர் விவகார அமைச்சு தீர்மானித்திருந்தது.

எனினும் தென்னை பாதுகாப்புச் சட்டத்தின் அடிப்படையில் இறக்குமதி செய்வதற்கு பல தரப்பினர் எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர்.

தென்னை பாதுகாப்புச்சட்டத்தின் பிரகாரம் தேங்காய் இறக்குமதி செய்ய முடியாது எனவும் கேரள தெங்குச் செய்கையை பாதித்துள்ள கிருமிகள் இலங்கையிலும் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும் எனவும் ஐக்கிய தேசியக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் கர்சடி சில்வா தெரிவித்துள்ளார்.

ஆய்வு நோக்கத்திற்காக மட்டும் தென்னை ஆராய்ச்சி சபையின் அனுமதியுடன் தேங்காய் இறக்குமதி செய்ய முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

தேங்காய் இறக்குமதி செய்வதற்கு விவசாய ஆணையாளர் நாயகம் அனுமதி வழங்க வேண்டும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இதனால் தேங்காய் இறக்குமதி செய்யும் நடவடிக்கை தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)


# புத்தளம், மன்னாரில் மூன்று நாட்கள் நல்லிணக்க ஆணைக்குழு விசாரணை

கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு எதிர்வரும் 7, 8, 9 ஆம் திகதிகளில் புத்தளம் மற்றும் மன்னாருக்கான விஜயத்தை மேற்கொள்ளவுள்ளது.

இதேவேளை எதிர்வரும் 21 ஆம் திகதி முதல் 25 ஆம் திகதி வரை அம்பாறை மாவட்டத்திற்கான விஜயத்தையும் எதிர்வரும் 28 ஆம் திகதி முதல் 30 ஆம் திகதி வரை அநுராதபுர மாவட்டத்திற்கான விஜயத்தையும் ஆணைக்குழு மேற்கொள்ளவுள்ளது.

நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை புத்தளம் மாவட்ட செயலகத்திலும் மறுநாள் 8 ஆம் திகதி சனிக்கிழமை காலை மன்னார் மாவட்ட செயலகத்திலும் மன்னார் நானாட்டான் மற்றும் சிலாவத்துறை மக்களுக்கான அமர்வு இடம்பெறவுள்ளது.

8 ஆம் திகதி சனிக்கிழமை மாலை மாந்தை மேற்கு உதவி அரசாங்க அதிபர் காரியாலயத்திலும் 9 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை மடு உதவி அரசாங்க அதிபர்காரி யாலயத்திலும் பொது மக்களின் சாட்சியங்களை ஆணைக்குழு பதிவு செய்யவுள்ளது. (ஸ்ரீ-2)



கிளிநொச்சி மாவட்டத்தில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகள் 10 பேருக்கு கனடாவிலுள்ள வாழவைப்போம் என்ற அமைப்பினூடாக பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் துவிச்சக்கரவண்டிகளை வழங்குவதை படத்தில் காணலாம்.

# தேர்தலின் போது நேர்மையாக செயற்படுவோருக்கு உயர் பதவி

## அமைச்சர் மைத்திரிபால சிறிசேன அறிவிப்பு



(கொழும்பு)

தேர்தலின் போது ஒழுக்கத்துடன் நேர்மையா கச் செயற்படுவோருக்கு உள்ளூராட்சி மன்றங்க ளின் உயர் பதவிகள் வழங்கப்படும் என ஸ்ரீலங்கா சுதந்திரக்கட் சியின் பொதுச் செயலாளர் மைத்திரி பால சிறிசேன தெரிவித்துள்ளார்.

அதிக விருப்பு வாக்குகளைப் பெற்றுக்கொள்வ தன் மூலம் மட்டும் தலைமைப்பொறுப்பு வழங்கப் படமாட்டாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கடந்த பொதுத்தேர்தலில் சில மாவட்டங்களில் அதிகூடிய விருப்பு வாக்குகளைப் பெற்றுக் கொண்ட சில பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு பிரதி அமைச்சர் பதவிகள் கூட வழங்கப்பட வில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார். இதே நடைமுறை எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத்தேர்தல்களிலும் பின்பற்றப்படும் என அவர் தெரிவித்துள்ளார். நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டுள்ள அல்லது கட்சியின் ஒழுக்க விதிகளை மீறிச் செயற்பட்டவர்களுக்கு தேர்தலில் போட்டியிடுவதற்கு சந்தர்ப்பம் அளிக் கப்படமாட்டாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ஸ்ரீ-2)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

### கழற்சிக்காய்

**Botanical Name - Caesalpinia bonduc**
**Family - Leguminosae**
**Engl - Bonduc nut**
**Sinh - Kumburu - wel**

இது கூரான சிறிய குறுகிய நீண்ட முட்களையுடைய பெருஞ் செடிவகையாகும். கூட்டிலைகள் ஒன்றுவிட்ட இலையமைப்பையுடையவை. பெரிய கோளவடிவ இலைகள் இருக்கும். 6 தொடக்கம் 8 சோடி சிற்றிலைகளைக் கொண்டதாகும். இவை 3.7 தொடக்கம் 6.2 செ.மீ நீளமும், எல்லாவற்றிலும் நிறைய சிறிய வளைந்த முட்களும் காணப்படும்.

ஒழுங்கற்ற பூக்கள் இருபாலானவை. பிரகாசமான மஞ்சள் நிறம் கொண்டவை. சிறிய தண்டுடைய இளம் காய்கள் 6.2 தொடக்கம் 9 செ.மீ நீளமுடையது. 3.7 செ.மீ அகலமுடையதுமாகும்.

முட்டைவடிவமுடைய காய்களுமாகும். காய்களைச் சுற்றி உரோமங்களும், நிறைய கூரிய முட்களும் காணப்படும். விதைகள் 1 தொடக்கம் 3 காணப்படும். 1.8 செ.மீ நீளமுடையவையுமாகும். இச் செடியின் பூக்கள் மாசிமாதத்தில் பூக்கும்.

**பரம்பலும், இனவிருத்தியும்**

இதில் வெள்ளை, கறுப்பு என இரு இன பெருஞ்செடிகள் உண்டு. வேர்க்கன்றுகள் மூலம் இனவிருத்தி செய்யலாம். கழற்சிக் கொடி ஆற்றங்கரை மற்றும் கடலோரப் பகுதிகளிலும், புதர்களிலும் அதிகமாக பரம்பிக் காணப்படும்.

**மருத்துவப் பயன்கள்:**

✦ 100 கழற்சிக்காயின் உள்பருப்பும் 200 மிளகும் இடித்துத் தூளாக்கி 500 மி.கி இலிருந்து 1 கிராம் வரை தினசரி 4 வேளை தொடர்ந்து 20 நாட்கள் சாப்பிட்டுவர ஒவ்வாமையால் ஏற்படும் ஆஸ்துமாநோய்



குணமடையும்.

✦ கழற்சிக்காய் உள்பருப்பை தோல்நீக்கிய பின் அதனை அப்படியே விழுங்கினாலும் ஆஸ்துமா குணமடையும்.

✦ கழற்சிக்காயின் பருப்பை அரைத்து 2 கிராம் அளவு இரவில் பாலுடன் சாப்பிட்டு வர வயிற்றிலுள்ள பூச்சிகள் அழியும்.

✦ கழற்சிக்காய் பருப்பை அரைத்து அதை ஆமணக்கு எண்ணெயில் கலந்து விதை வீக்கத்திற்கு பூசலாம்.

✦ வயிற்றெரிவிற்கு கழற்சிக்காய் ஒரு கிராம், சுக்கு ஒரு கிராம் சேர்த்து அரைத்து சாப்பிட்டுவர வயிறெரிவு தணிந்து வயிற்றுப் பொருமலும் அகலும்.

✦ இரத்தம் சுத்தமடைய கழற்சி இலைகள் 7, மிளகு 7 இரண்டையும் சிறிது தண்ணீருடன் வடிகட்டிக் குடிக்கலாம். நல்லெண்ணெயில் 25 கிராம் கழற்சிக்காய் பருப்பை நன்றாகக் கொதிக்க வைத்து வடிகட்டி ஆறிய பின் பூசினால் சொரி, சிரங்கு குணமாகும்.

✦ கழற்சி பருப்பு தூள் 100 கிராம், கொடிவேலி வேர்த்தூள், இந்துப்பு ஒவ்வொன்றும் வகைக்கு 10 கிராம் வீதம் எடுத்து பொடித்து எல்லாவற்றையும் ஒன்றாகக் கலந்து ஒன்று தொடக்கம்2 கிராம் அளவு காலை, மாலை வெந்நீரில் 1 தொடக்கம் 4 வாரங்கள் வரை சாப்பிட்டு வந்தாலும் விதைவீக்கம் தீரும். அல்லது 5 கழற்சிக்காய் பருப்பு எடுத்து முட்டை வெள்ளைக்கருவில் நன்கு அரைத்து அடைதட்டி 100 மில்லி ஆமணக்கெண்ணெயில் போட்டு அடையாகச் சுட்டு எடுத்து கொள்ளவும். இந்த எண்ணெயை இரவு தூங்கும் முன்பு 1 தேக்கரண்டி அளவு எடுத்து பசும்பாலில் கலந்து தினமும் சாப்பிட்டு வந்தாலும் விதைவீக்கம் தீரும்.

✦ கழற்சிப்பருப்பு, சுக்கு, களிப்பாக்கு இவற்றை முறையே மூன்று, இரண்டு, ஒன்று எடையில் எடுத்து, முட்டையின் வெள்ளைக் கருவை விட்டு, கறுப்பு கருங்கல்லினால் மைபோல அரைத்து பற்றிடுவதால் யானைக் கால் நோயால் வரும் விதைவீக்கம் தீரும்.

இதன் விதையை சுட்டுப் பொடித்து, அதோடு வறுத்த பாக்குத்தூள் சம எடை எடுத்து சிறிது வெங்காயமும் சேர்த்து பல் துலக்கிவர பல் இறுகும். பல் நோய் தீரும்.

விதையை பொடித்து பெருங்காயம் சிறிது சேர்த்து மோரில் கலக்கிச் சாப்பிட வயிற்றுப் புண் நோய் தீரும். அல்லது கழற்சிப்பருப்பு, வெள்ளுள்ளி, முருங்கைப் பட்டை வசம்பு, சுக்கு முதலியவற்றை தண்ணீர் விட்டு 1/8 ஆக வற்றக்காய்ச்சி வயிற்று நோ எரிவிற்கு 30 தொடக்கம் 60 மில்லி அளவு காலை மாலை பருக வயிற்று நோய் தீரும்.

டாக்டர் திருமதி விவியன் சத்தியசீலன் (M.D.C.S.)
சிரேஷ்ட விரிவுரையாளர், சித்தமருத்துவத்துறை,
யாழ். பல்கலைக்கழகம், கைதடி.

# நாணயத்தாள்களை சுத்தமாக பேணி பாதுகாக்குமாறு மத்திய வங்கி கோரிக்கை

நாணயத்தாள்களை சுத்தமாகப் பேணிப் பாதுகாக்குமாறு இலங்கை மத்திய வங்கி பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

புழக்கத்திலுள்ள நாணயத்தாள்கள் மற்றும் நாணயக் குற்றிகளை சுத்தமாகப் பேணுவதன் அவசியம் குறித்து மத்திய வங்கி மக்களுக்கு தெளிவுபடுத்தத் தீர்மானித்துள்ளது.

வானொலி மற்றும் தொலைக் காட்சி நிகழ்ச்சிகளில் மூலம் விசேட விழிப் புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என அறிவிக்கப்பட் டுள்ளது.

அசுத்தமான நாணயத்தாள்களை பயன்படுத்த வெளிநாட்டுப் பிரஜைகள் குறிப்பாக சுற்றுலாப் பயணிகள் விரும்புவதில்லை என மத்திய வங்கியின் நாணயப் பிரிவு அத்தியட்சகர் சி.பி. கருணாதிலக்க தெரிவித்துள்ளார். அசுத்தமான நாணயத்தாள்கள் புழக்கத்தில் இருந்தால் சுற்றுலாப் பயணிகளின் மத்தியில் இலங்கை தொடர்பான நன்மதிப்பு குறைவடையக் கூடும் எனக் குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

# 55 விடுதலைப்புலி உறுப்பினர்களை விளக்கமறியலில் வைக்க உத்தரவு

(கொழும்பு)

இறுதிக் கட்ட யுத்தத்தின்போது தப்பிச்சென்று இலங்கையின் பல பிரதேசங்களில் ஒளிந்திருந்து கைதான விடுதலைப்புலிகளின் முன்னணி உறுப்பினர்களை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இறுதிக் கட்ட யுத்தத்தின் போது தப்பிச்சென்று நலன்புரி முகாம்களுக்கு வெளியே பல பிரதேசங்களில் தலைமறைவாகி வாழ்ந்து வந்திருந்த நிலையில் கைது செய்யப்பட்ட 55 விடுதலைப்புலி உறுப்பினர்கள் நேற்று முன்தினம் கொழும்பு நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டிருந்தனர்.

பயங்கரவாதத் தடுப்புப்பிரிவினால் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் போது அவர்கள் அனைவரும் விடுதலைப்புலிகளின் முன்னணி உறுப்பினர்கள் என்பது தெளிவாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாகவும் நீதிமன்றத்தில் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

விடயங்களைக் கவனமாக ஆராய்ந்த நீதிமன்றம், அவர்கள் தொடர்பில் மேலதிக நடவடிக்கைகளைத் தீர்மானிக்கும் பொருட்டு எதிர்வரும் 17ஆம் திகதிவரை விளக்கமறியலில் தடுத்து வைக்குமாறு உத்தரவிட்டது. (ஸ்ரீ-2)

# காலநிலை மாற்றங்களின் கீழ் விலை அதிகரிப்பு தவிர்க்க முடியாதது

## அமைச்சர் ஜோன் செனவிரட்ன தெரிவிப்பு

(கொழும்பு)

உப்பு மற்றும் பெரிய வெங்காயம் என்பனவற்றின் விலைகள் அதிகரித்துள்ளன.

விவசாயப் பிரிவை எவ்வளவுதான் சிறப்பாக நிர்வாகம் செய்தாலும் காலநிலை மாற்றங்களின் கீழ் இத்தகைய விலை அதிகரிப்புக்கள் தவிர்க்க முடியாதவை என்று பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சர் டபிள்யூ .டி. ஜே.ஜோன் செனவிரட்ன தெரிவித்துள்ளார்.

அவர் தெரிவிக்கையில்,

நாட்டில் பெரிய வெங்காயத் தட்டுப்பாட்டை நீக்க இந்தியாவிலிருந்து வெங்காயம் இறக்குமதி செய்யப்பட்டது. ஆனால் தற்போது இந்தியாவி லும் உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளதால் அங்கிருந்தும் இறக்குமதி செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

எமது அரசியல்வாதிகளையும் ஜனாதிபதியையும் குறை கூறுவதால் இந்த நிலைமைகளைச் சீர்செய்ய முடியாது என்றும் அமைச்சர் மேலும் கூறினார். (ஸ்ரீ-2)

# கொழும்பு மாநகர மேயர் பதவிக்கு மனோகணேசன் போட்டியிட தீர்மானம்?

(கொழும்பு)

கொழும்பு மாநகரசபை மேயர் பதவிக்காக ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் போட்டியிடத் தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களின் போது கொழும்பு மாநாகர சபைக்காக ஜனநாயக மக்கள் முன்னணி தனித்து போட்டியிடத் தீர்மானித்துள்ளது.

தமிழ் அரசியல் கட்சிகளை ஒன்றிணைத்து தேர்தலில் போட்டியிடுவதற்கு ஜனநாயக மக்கள் முன்னணி முயற்சிகளை மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடுவது தொடர்பில் நாளை மறுதினம் இறுதித் தீர்மானம் எடுக்கப்படும் என ஜனநாயக மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் குமரகுருபரன் தெரிவித்துள்ளார்.

கொழும்பு மாவட்டத்தில் ஜனநாயக மக்கள் முன்னணிக்கு அதிக ஆதரவு காணப்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேயர் பதவிக்காக மனோ கணேசன் போட்டியிட வேண்டுமென கட்சியின் ஆதரவாளர்கள் விரும்புவதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை நாட்டின் ஏனைய பிரதேசங்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட தமிழ் அரசியல் கட்சிகளுடன் இணைந்து போட்டியிடுவது குறித்து கவனம் செலுத்தப்பட்டு வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.(ஸ்ரீ-2)

# அடையாள அட்டை கண்டெடுப்பு

(யாழ்ப்பாணம்)

கல்திட்டி ஒழுங்கை, ஆறுகால் மடம் என்னும் முகவரியைச் சேர்ந்த இரட்ணராஜா- செல்வரட்ணம் என்பவரின் (892922888V) என்னும் இலக்கமுடைய தேசிய அடையாள அட்டை கண்டெடுக்கப்பட்டு வலம்புரிக் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

எனவே உரியவர் அலுவலக நேரத்தில் வருகை தந்து பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப் படுகின்றார். (4)

# நாடும் நடப்பும்

## வரம்பிலா சஞ்சலமே

பாப்பா வில்லேற்றாதீ: தப்பாகப் போய்விடும்
தப்பேது வென்று இப்போது தெரியாது
அப்போது தாயின் மூக்கதனைத் தனையன்
தன் வாயால் தத்தெடுத்த வதை அறியாதோர்
வெந்த உடலும் நொந்த மனமும் மிகவாட
வசை பாடும் சரசங்கள்; பரிகாசங்கள்
மலிந்தவர் கள்மதியுரைக ளாற்றின்
பின்மனதில் மிஞ்சும் வரம்பிலா சஞ்சலமே.

அறியாதவன்

# இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

2011.01 05

★1477 - பேர்கண்டி இளவரசன் சார்ள்ஸ் கொல்லப்பட்டான். பேர்கண்டி பிரான்சின் பகுதியானது.

★1554 - நெதர்லாந்தில் ஐன்ட்ஹோவெள் என்ற இடத்தில் பரவிய தீயினால் 75 விழுக்காடு வீடுகள் சேதமாயின.

★1655 - கோ-சாய் என்பவன் ஜப்பானின் மன்னனானான்.

★1757 - பிரான்சின் பதினைந்தாம் லூயி கொலை முயற்சி ஒன்றிலிருந்து தப்பினான்.

★1781 - அமெரிக்கப் புரட்சிப் போர்: வேர்ஜீனியாவில் ரிச்மண்ட் நகரம் பிரித்தானியக் கடற்படையினரால் தீக்கிரையாக்கப்பட்டது.

★1854 - சான் பிரான்சிஸ்கோவில் நீராவிக் கப்பல் ஒன்று மூழ்கியதில் 300 பேர் கொல்லப்பட்டனர்.

★1896 - வில்ஹெம் ரொண்ட்ஜென் ஒரு வகைக் கதிர்வீச்சைக் கண்டுபிடித்ததாக ஆஸ்திரியப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டிருந்தது. இது பின்னர் எக்ஸ் கதிர் எனப் பெயரிடப்பட்டது.

★1900 - ஐரிஷ் தலைவர் ஜோன் எட்வர்ட் ரெட்மண்ட் பிரித்தானியாவின் ஆட்சிக்கெதிராகக் குரல் எழுப்பினார்.

★1905 - யாழ்ப்பாணத்தில் இருந்து வெளியான மோர்னிங் ஸ்டார் வாரப் பத்திரிகையாக பெரிய அளவில் வெளிவர ஆரம்பித்தது.

★1918 - ஜேர்மன் தொழிலாளர்களின் அமைதிக்கான சுதந்திரக் குழு (நாசிக் கட்சி) அமைக்கப்பட்டது.

★1933 - கோல்டன் கேட் பாலத்தின் கட்டுமானப் பணிகள் சான்பிரான்சிஸ்கோவில் ஆரம்பித்தது.

★1940 - பண்பலை வானொலி முதற் தடவையாக காட்சிப்படுத்தப்பட்டது.

★1945 - போலந்தின் புதிய சோவியத் சார்பு அரசை சோவியத் ஒன்றியம் அங்கீகரித்தது.

★1967 - இலங்கை வானொலி இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் எனப் பெயர் மாற்றம் பெற்றது.

★1971 - உலகின் முதல் ஒருநாள் கிரிக்கெட் போட்டி அவுஸ்திரேலியா-இங்கிலாந்து அணிகளுக்கிடையில் மெல்போர்னில் நடைபெற்றது.

★1972 - விண்ணோடத் திட்டத்தை முன்னெடுக்க அமெரிக்க ஜனாதிபதி ரிச்சார்ட் நிக்சன் உத்தரவிட்டார்.

★1974 - பெருவின் தலைநகரான லீமாவில் நிகழ்ந்த நிலநடுக்கத்தினால் நூற்றுக்கணக்கான வீடுகள் சேதமடைந்தன. 6 பேர் கொல்லப்பட்டனர்.

★1975 - தாஸ்மானியாவில் டாஸ்மான் பாலத்தில் சரக்குக் கப்பல் ஒன்று மோதியதில் 12 பேர் கொல்லப்பட்டனர்.

★1976 - கம்போடியா சனநாயகக் கம்பூச்சியா என கெமர் ரூச் அரசினால் பெயர் மாற்றம் பெற்றது.

★1984 - ரிச்சர்ட் ஸ்டோல்மன் குனூ இயங்குதளத்தை உருவாக்கத் தொடங்கினார்.

★1997 - ரஷ்யப் படைகள் செச்சினியாவில் இருந்து வெளியேறின.

★2005 - ஐக்கிய அமெரிக்காவின் கலிபோர்னியாவைச் சேர்ந்த மைக்கல் பிரவுண் தலைமையிலான வானியல் ஆராய்ச்சிக் குழுவினர் சூரியக் குடும்பத்தில் ஏரிஸ் என்ற புதிய குறுங்கோள் ஒன்றைக் கண்டுபிடித்தனர்.

★2007 - கொழும்பிலிருந்து 36கிமீ தொலைவில் நித்தம்புவ என்ற இடத்தில் இடம்பெற்ற பேருந்துக்குண்டு வெடிப்பில் 6 பொதுமக்கள் கொல்லப்பட்டு 50 பேர் வரை காயமும் அடைந்தனர்.

## பிறப்புகள்

★1592 - ஷாஜஹான், மொகாலயப் பேரரசர் (இ.1666)

★1846 - ருடோல்ஃப் இயூக்கென், நோபல் பரிசு பெற்ற ஜேர்மனிய எழுத்தாளர் (இ.1926)

★1874 - ஜோசப் ஏர்லாங்கர், நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர் (இ.1965)

★1902 - ரா.கிருஷ்ணசாமி நாயுடு, தமிழக அரசியல்வாதி (இ.1973)

★1926 - ஜே.பி.ஜெயரத்தினம், சிங்கப்பூர் அரசியல்வாதி (இ.2008)

★1927 - சிவாய சுப்ரமணியசுவாமி, இந்து அமெரிக்க ஆன்மீகவாதி (இ.2001)

★1928 - சுல்பிக்கார் அலி பூட்டோ, பாகிஸ்தானின் ஜனாதிபதி (இ.1979)

★1932 - உம்பேர்டோ ஈக்கோ, இத்தாலிய எழுத்தாளர்

★1937 - சித்தி அமரசிங்கம், ஈழத்துக் கலைஞர், பதிப்பாளர் (இ.2007)

★1938 - நுகுகி வா தியங்கோ,கென்ய எழுத்தாளர்

★1986 - தீபிகா படுகொணெ,இந்திய திரைப்பட நடிகை

## இறப்புகள்

★1933 - கால்வின் கூலிட்ஜ், ஐக்கிய அமெரிக்காவின் 30ஆவது ஜனாதிபதி (பி.1872)

★1970 - மாக்ஸ் போர்ன், நோபல் பரிசு பெற்ற ஜேர்மனிய இயற்பியலாளர் (பி.1882)

★1981 - ஹறோல்ட் உரே, நோபல் பரிசு பெற்ற அமெரிக்க வேதியியலாளர் (பி. 1893)

**2000-இலங்கையின் தமிழ் அரசியற் தலைவர் குமார் பொன்னம்பலம் கொழும்பில் படுகொலை செய்யப்பட்டார் (பி.1938)**



# எதிர்க்கட்சித் தலைவர் சுட்டுக்கொலை; பாகிஸ்தானில் கலவரம் வெடிப்பு

## 8 பேர் பலி; பலர்காயம்



(கராச்சி)

பாகிஸ்தானின் வர்த்தக நகரமாக கராச்சி விளங்குகிறது. இங்கு எதிர்க்கட்சியான முத்தாகிதா குயாமி இயக்க குல்பகர் பகுதியின் தலைவர் அதில் ஜப்ரி மர்ம நபர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இச்சம்பவம் நஷிமா பாத்தில் நேற்று முன்தினம் மாலை நடந்தது. முத்தாகிதா குயாமி இயக்கம் பாகிஸ்தானின் கூட்டணி அரசில் அங்கம் வகித்தது. அக்கட்சி அரசுக்கு அளித்து வந்த ஆதரவை கடந்த 2 ஆம் திகதி விலக்கிக் கொண்டது. இதனால் பிரதமர் கிலானியின் அரசு ஆட்டம் கண்டுள்ளது.

இந்த நிலையில் இக்கட்சியின் தலைவர் சுட்டுக்கொல்லப்பட்டது அதன் தொண்டர்களிடம் கொந்தளிப்பையும் ஆத்திரத்தையும் ஏற்படுத்தியுள்ளது. இதனால் வன்முறை மற்றும் கலவரத்தில் ஈடுபட்டனர். இதனால் தீ வைப்பு, அடிதடி, மோதல் போன்றவை நடந்தன. ஒருவரையொருவர் பயங்கர ஆயுதங்களால் தாக்கி கொண்டனர்.

இச்சம்பவத்தில் இதுவரை 8 பேர் உயிரிழந்துள்ளனர். பலர் காயம் அடைந்து வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். கலவரத்தை தொடர்ந்து கராச்சி நகரம் பதற்றத்தில் சிக்கி தவிக்கிறது. பொலிஸார் தீவிர ரோந்து பணியில் ஈடுபட்டுள்ளனர்.

கடைகள் மற்றும் வங்கிகளுக்கு தீ வைக்கப்பட்டது. எனவே வர்த்தக நிறுவனங்கள் மூடப்பட்டுள்ளன. பெற்றோல் பங்குகளும் அடைக்கப்பட்டுள்ளன.

அரசுக்கு அளித்த ஆதரவை விலக்கி கொண்டதால் ஆளும் பாகிஸ்தான் மக்கள் கட்சியினர் தங்களது கட்சி தலைவரை கொலை செய்ததாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

## ஈரானில் இவ்வாண்டில் 12 பேருக்கு மரணதண்டனை

ஈரானில் போதை கடத்தல், கொலை , கற்பழிப்பு, கடத்தல், கள்ளக்காதல் ஆகிய குற்றச் செயலில் ஈடுபடுவர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்படுகிறது.

கடந்தாண்டு இதுபோன்ற குற்றங்களில் ஈடுபட்ட 179 பேர் தூக்கிலிடப்பட்டனர்.

இந்த ஆண்டில் 12 பேருக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது. ஈரானின் கெர்மான்ஷா நகரில் போதை கடத்திய ஏழு பேரும் , சிஸ்தான் பலுசிஸ்தான் மாகாணத்தில் கொலை குற்றத்தில் ஈடுபட்ட ஒரு நபரும் நேற்று முன்தினம் தூக்கிலிடப்பட்டனர். (ஸ்ரீ-2)


## நடுக்கடலில் கப்பல் கவிழ்ந்ததில் நாற்பது ஆபிரிக்கர்கள் பலி!!!

(ஏடன்)

ஆபிரிக்க நாடான எதியோப்பியாவிலிருந்து அடைக்கலம் தேடி ஏமன் நாட்டிற்கு கடல் வழியாக படகு மூலம் சென்ற 40 ஆபிரிக்கர்களும் நடுக்கடலில் படகு கவிழ்ந்ததில் பலியானதாக ஏமன் உள்துறை அமைச்சகம் தகவல் வெளியிட்டுள்ளது.

இதுகுறித்து ரொய்ட்டர்ஸ் செய்தி நிறுவனம் வெளியிட்டுள்ள செய்தியில், எதியோப்பிய நாட்டைச் சேர்ந்த 46இற்கும் மேற்பட்டோர் புகலிடம் தேடி ஏமன் நாட்டின் ஏடன் வளைகுடா வழியாக படகு மூலம் சென்றுள்ளனர்.

கடலில் ஏற்பட்ட திடீர் மாற்றத்தினால் அலைகள் வழக்கத்திற்கு மாறாக அடிக்கவே படகு நிலை தடுமாறி மூழ்கியது. இச்சம்பவத்தில் 40 பேர் இறந்தனர். இதில் குழந்தைகள், பெண்கள் அடங்குவர். (ஸ்ரீ-4)



அவுஸ்திரேலியோவில் குயின்ஸ்லேண்ட் மாகாணத்தில் கடந்த சில நாட்களாக கனமழை பெய்து வருகிறது. இதனால் அங்குள்ள ஆறுகளில் வரலாறு காணாத வகையில் பெரும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது.




## அமெரிக்க விமானத் தாக்குதலில் பின்லேடனின் உதவியாளர் பலி

பாகிஸ்தானின் வடமேற்குப் பகுதியில் அமெரிக்க போர் விமானங்கள் நேற்று முன்தினம் நடத்திய தாக்குதலில் ஒசாமா பின்லேடனின் உதவியாளர் கொல்லப்பட்டார்.

பாகிஸ்தானின் வடமேற்கில் உள்ள வடக்கு வசிரிஸ்தானில் அண்மையில் அமெரிக்கப் போர் விமானங்கள் குண்டு வீசித் தாக்குதல் நடத்தின. இதில் நாசீர் அல் வகிஷி (வயது 32) என்பவர் கொல்லப்பட்டார்.

இவர் 2003 இல் ஏமனுக்கு நாடு கடத்தப்பட்டார். 2006 இல் இவரும் மற்றும் 23 பயங்கரவாதிகளும் சிறையில் இருந்து தப்பித்தனர். இன்டர் போல் பொலிஸார் இவரைத் தேடி வந்தனர்.

2009 இல் சவுதி அரேபியா மற்றும் ஏமன் நாடுகளில் இயங்கி வந்த அல்கொய்தா சிறுசிறு குழுக்களை ஒன்றிணைத்தவர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-4)

# ஐவரிகோஸ்ட் ஜனாதிபதி பேக்போ பதவி விலகினால் பொதுமன்னிப்பு

(அபிட்ஜான்)

ஐவரிகோஸ்ட் ஜனாதிபதி பதவி பிரச்சினையில் அடுத்தகட்ட முடிவு எடுப்பதற்காக நான்கு ஆபிரிக்க நாடுகளின் ஜனாதிபதிகள் நேற்று முன்தினம் அங்கு சென்றனர். ஐவரி கோஸ்ட் ஜனாதிபதி லாரன் பேக்போ பதவி விலகினால் அவருக்கு பொதுமன்னிப்பு வழங்கப்படும்.

அவரது ஆதரவாளர்களுக்கும் பாதுகாப்பு அளிக்கப்படும் என்ற இரு திட்டங்களை இக்குழு முன்வைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஆபிரிக்க நாடான ஐவரிகோஸ்ட்டில் கடந்த நவம்பர் 28 ஆம் திகதி நடந்த ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க்கட்சி தலைவர் அலசான் வட்டாரா வெற்றி பெற்றார். ஆனால் அப்போதைய ஜனாதிபதி லாரன் பேக்போ வெற்றி பெற்றதாக அந்நாட்டு அரசியல் சாசன சபை அறிவித்தது.

அமெரிக்கா,ஆபிரிக்க யூனியன், ஐரோப்பா, எக்கோவாஸ் நாடுகள் அலசான் வட்டாராவுக்கு தங்கள் ஆதரவை அளித்தன. இருந்தும் பேக்போ ஜனாதிபதி பதவியில் இருந்து விலக மறுத்து விட்டார். அவரை பதவி விலக வைக்க மேற்கு ஆபிரிக்க நாடுகள் யூனியன், மேற்கு ஆபிரிக்க நாடுகள் பொருளாதார கமிட்டி (எக்கோவாஸ்) ஆகியவை மேற்கொண்ட முயற்சிகள் தோல்வியில் முடிவடைந்தன.

பேக்போ பதவி விலக மறுத்தால் இராணுவம் மூலம் அவர் அகற்றப்படுவார் என எச்சரித்த எக்கோவாஸ் படைகளை தயார் நிலையில் வைத்திருந்தது.

இந்நிலையில் மேற்கு ஆபிரிக்க நாடுகளான பெனின் சியரா லியோன் மற்றும் கேப் வெர்டே ஜனாதிபதிகள் மூன்று பேரும் ஆபிரிக்க யூனியன் சார்பில் அதன் பிரதிநிதியாக நியமிக்கப்பட்ட கென்ய ஜனாதிபதி ரைலா ஒடிங்காவும் ஐவரிகோஸ்ட் தலைநகர் அபிட்ஜானுக்கு சென்றனர். சியரா லியோன் நாட்டின் தகவல்துறை அமைச்சர் இப்ராகிம் பென் கார்க்போ, ஜனாதிபதி பேக்போவை பதவியில் இருந்து இறக்கத்தான் ஆபிரிக்க நாடுகளின் தலைவர்கள் ஐவரி கோஸ்ட்டுக்கு சென்றுள்ளனர்.

அவருடன் பேச்சுவார்த்தை நடத்த அல்ல என்று கூறியுள்ளார். பேக்போ பதவி விலக சம்மதித்தால் அவருக்கு சட்டபூர்வ பொது மன்னிப்பும் அவரது ஆதரவாளர்களுக்கும் பாதுகாப்பும் அளிக்கப்படும் என்ற இரு நிபந்தனைகளை ஆபிரிக்க நாடுகளின் தலைவர்கள் முன்வைப்பர் என தெரிகிறது. இம் முடிவுக்கு பேக்போ கட்டுப்படாவிட்டால் இம் மாதம் 17 ஆம் திகதி நடக்கவிருக்கும் ஆபிரிக்க நாடுகளின் தலைவர்கள் கூட்டத்தில் இறுதி முடிவு எடுக்கப்படும்.

## ஆபிரிக்க தலைவர்கள் அறிவிப்பு

கொக்கோ பயிர் அதிகம் விளையும் நாடுகளில் ஐவரிகோஸ்ட்டும் ஒன்று. அதன் பொருளாதார ஜீவாதாரமே கொக்கோதான். இதனால் வறுமையில் வாடும் மாலி, புர்கினோ பாசோ நாடுகளில் இருந்து மக்கள் அலையலையாக ஐவரிகோஸ்ட்டுக்கு வேலை தேடி புலம் பெயர்ந்தனர்.

வடக்கில் முஸ்லிம்கள், தெற்கில் கிறிஸ்தவர்கள் என நாடு இரண்டானது. நாட்டு விடுதலைக்காகப் போராடிய பெலிக்ஸ் ஹொப் பொவெட் போய்க்னி, 1960 முதல் 1993 வரை ஜனாதிபதியாக இருந்தார். 1993 இல் போய்க்னி இறந்தவுடன் ஹென்றி கொனன் பெடி ஜனாதிபதியானார். 1995 இல் நடந்த தேர்தலை எதிர்க்கட்சிகள் புறக்கணிக்க பெடியே மீண்டும் ஜனாதிபதியானார். இதற்கிடையில் கிறிஸ்தவர்கள் தம்மைப் புறக்கணிப்பதாக முஸ்லிம்கள் மத்தியில் கசப்புணர்வு பரவ ஆரம்பித்தது. 1999 இல் சர்வதேச நிதியத்தில் (ஐ.எம்.எவ்) பணியாற்றி வந்த இஸ்லாமியரான அலசான் வட்டாரா ஜனாதிபதித் தேர்தலில் பங்கேற்பதற்காக பணியை இராஜினாமாச் செய்துவிட்டு நாடு திரும்பினார்.

கடந்த1999 ஜூலையில் இராணுவத் தளபதி ராபர்ட் கி நடத்திய இராணுவப் புரட்சியில் பெடி தூக்கியெறியப்பட்டார். 2000 இல் தான் நடத்திய தேர்தலில் தானே வெற்றிபெற்றதாக அறிவித்த கி, ஜனாதிபதியாகத் தன்னை அறிவித்துக் கொண்டார். வட்டாரா தேர்தலை விட்டு நீக்கப்பட்டார். அதேநேரத்தில் தான் வெற்றி பெற்றதாக ஐவரியன் பாப்புலர் முன்னணி கட்சித் தலைவர் லாரன் பேக்போவும் கூறினார். 2000 ஒக்டோபரில் , பேக்போ மற்றும் வட்டாரா ஆதராவாளர்களிடையே மோதல்கள் மூண்டன.

இதைத் தொடர்ந்து 2000 ஆம் ஆண்டு டிசெம்பரில் நடந்த நாடாளுமன்றத் தேர்தலில் லாரன்பேக்போ பெரும்பான்மை வெற்றி பெற்றார். இதன்பின் 2002-07 காலகட்டத்தில் நடந்த உள்நாட்டுப் போரில் நூற்றுக் கணக்கானோர் பலியாகினர். 2007இல் அரசுக்கும் ,எதிர்ப்புப் படைகளுக்கும் இடையில் ஒப்பந்தம் நடந்தது. எதிர்ப்புப் படைகள் தலைவர் கில்லம் சொரோ பிரதமரானார். எனினும் தொடர்ந்து இரு தரப்பிலும் மோதல்கள் நிகழ்ந்தன. கடந்தாண்டு நவம்பர் 28 இல் ஜனாதிபதித் தேர்தல் நடந்தது. இன்று வரை அப்பிரச்சினை நீடிக்கிறது. (ஸ்ரீ-2)

# மாட்டுக் கொட்டில்களைவிட மிக மோசமாக காட்சியளிக்கும் மீள் குடியேற்ற கிராமங்கள்

## சிவசக்தி ஆனந்தன் மீள்குடியேற்ற அமைச்சருக்கு கடிதம்

வவுனியா பிரதேச மீள் குடியேற்ற கிராமங்களில் குடிநீர் வசதிகளின்றி மக்கள் குளத்து நீரையும் மழை நீரையும் குடித்து வருவதாகவும் கூடாரங்களுக்கு மறைப் பின்றி சேலைகளைக் கட்டியுள்ளதாகவும் தெரிவித்துள்ள தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு இந்த மக்களுக்கான அடிப்படை வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டும் என்று மீள்குடியேற்ற அமைச்சர் குணரட்ன வீரக்கோனிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

வவுனியா பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட சின்னத்தம்பனை, மடுக்குளம், வேலங்குளம், செங்கல்படை ஆகிய மீள் குடியேற்ற கிராமங்களுக்கு விஜயம் செய்த தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான என்.சிவசக்தி ஆனந்தன் மற்றும் செல்வம் அடைக்கலநாதன் ஆகிய இருவரிடமும் இங்குள்ள மக்கள் தமது வசதியீனங்கள், குறைப்பாடுகள், தேவைகள் குறித்து நேரடியாக எடுத்துக்கூறியுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் என்.சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார்.

இந்தக் கிராமங்களில் 244 குடும்பங்கள் மீள்குடியேற்றம் செய்யப்பட்டுள்ளன. இந்த மக்கள் தமது சொந்த இடங்களில் மீளக் குடியேறி 4 மாதங்கள் ஆகின்றன. ஆயினும் தங்களுக்குரிய அடிப்படை வசதிகள் இன்னும் முறையாகச் செய்யப்படவில்லை. என இந்த மக்கள் தமது கிராமங்களுக்கு விஜயம் செய்த நாடளுமன்ற உறுப்பினர்களிடம் தெரிவித்துள்ளனர்.

அடை மழை காரணமாக இந்த மக்கள் அடிப்படை வசதிகளில்லாத காரணத்தினால் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியிருப்பதாக மீள்குடியேற்ற அமைச்சர் குணரட்ன வீரக்கோனுக்கு எழுதியுள்ள கடிதத்தில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் என்.சிவகச்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார்.

சுத்தமான குடிநீர் விநியோகம் செய்யப்படாத காரணத்தினால் இவர்கள் குளத்து நீரையும் மழை நேரத்தில் மழைநீரையுமே குடிக்கின்றார்கள். இதனால் இந்த மக்கள் பல்வேறு தொற்று நோய்களுக்கும் ஆளாகக் கூடிய சந்தர்ப்பமும் ஆபத்தும் நிலவுகின்றது.

இவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள தறப்பாள்களைக் கொண்டு இவர்கள் கொட்டில்களை அமைத்து அவற்றில் வாழ்ந்து வரு கின்றார்கள். மறைப்புக்குத் தேவையான அளவில் தறப்பாள்களையோ மற்றும் தகரம் போன்றவற்றையோ வழங்காத காரணத்தினால் பல குடும்பங்கள் தமது சேலைகளையே மறைப்பாகக் கட்டியிருக்கின்றார்கள்.

இவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள தறப் பாள்கள் பழுதடைந்திருப்பதனால் பெரும் மழை பெய்யும்போது மழை நீர் உள்ளே சிந்துகின்றது. கூடாரத்தின் உள்ளே வெளியில் இருந்தும் மழை வெள்ளம் புகுவதனால் கூடாரங்களின் நிலம் சேறாக இருக்கின்றது.

மாட்டுக்கொட்டில்களையும் விட இவைகள் மோசமாகக் காட்சியளிக்கின்றன. சிலர் கொட்டில்களுக்குள் தடிகளால் அமைக்கப்பட்டுள்ள சிறாம்பிகளில் படுத்துறங்குகின்றனர். இவற்றை அமைக்க முடியாதவர்கள் மழை நேரத்தில் நிலம் சேறாக இருப்பதன் காரணமாக இருக்கவோ, படுக்கவோ முடியாத அவல நிலையில் இருக்கின்றார்கள்.

இந்தப் பிரதேசத்தில் யுத்த காலத்தில் பாதுகாப்பு காரணங்களுக்காக அமைக்கப்பட்ட பாதுகாப்பு அரண்கள் அகற்றப்படாத காரணத்தினால் பல இடங்களில் மழை வெள்ள நீர் வழிந்தோடுவதற்கு வழியின்றி தேங்கியிருக்கின்றது.

மீள்குடியேறிய மக்களுக்கு நிவாரணமாக உலக உணவுத் திட்டத்தினால் வழங்கப்பட்டு வந்த 5 பேர் கொண்ட குடும்பத்திற்கு 35 கிலோ கோதுமை மாவும் 3 கிலோ சீனியும் இப்போது 15 கிலோ மாவும் 1.8 கிலோ சீனியுமாகக் குறைக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இந்தக் குடும்பங்களுக்கு வழங்கப்பட வேண்டிய 25 ஆயிரம் மீள் குடியேற்றக் கொடுப்பனவு, சீமெந்து மற்றும் கூரைத் தகடுகள் என்பன இன்னும் வழங்கப்படவில்லை.

சின்னத்தம்பனை கிராமத்தின் பாடசாலைக்குத் தற்காலிகக் கொட்டில் அமைப்பதற்கும் அதனை நிரந்தரக் கட்டடமாக மாற்றி நிர்மாணிப்பதற்கும் நடவடிக்கை எடுப்பதுடன் இந்தப் பிரதேசத்தில் நிலவுகின்ற போக்குவரத்துக்கான குறைபாடுகள் வீதிதிருத்தங்கள் என்பவற்றையும் மேற்கொள்வதற்கு மீள் குடியேற்ற அமைச்சர் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அந்தக் கடிதத்தில் கோரப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

## வவுனியா தேசிய கல்வியியற்கல்லூரி உடற்கல்வி பாடநெறிக்கு தெரிவானோர்

(யாழ்ப்பாணம்)

வவுனியா தேசிய கல்வியியற்கல்லூரிக்கு 2011 ஆண்டுக்கான உடற்கல்வி பாட நெறிக்கு தமிழ் மொழிமூலம் மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இப்பாடநெறிக்கு வடமாகாணத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் விபரம் வருமாறு,

கே.விமலநாத் (சுண்டுக்குளி), எம். திலீபன் (பேசாலை -மன்னார்), கே. கணாதீபன் (அளவெட்டி), ஏ.ஆர். அனோஜன் (நாரந்தனை), எஸ். கீர்த்திகா (மல்லாகம்) ,எம். நவரட்ணம் (பண்டத்தரிப்பு) ,ஆர்.எம்.ஜோன்சன் (வவுனியா) (ஸ்ரீ-4)

## ஒரு துளி இரத்தம் மூலம் புற்றுநோயை கண்டுபிடிக்கலாம்

### புதிய ஆய்வில் தகவல்

இரத்தப் பரிசோதனை மூலம் உடலில் ஏற்படும் பல்வேறு நோய்களைக் கண்டு பிடித்து சிகிச்சை அளித்து வருகின்றனர். இதற்காக ஊசிமூலம் அதிகளவில் இரத்தம் எடுத்து பரிசோதனை நடத்தப்படுகிறது.

ஆனால் ஒரு துளி இரத்தம் மூலம் புற்று நோயைக் கண்டுபிடித்து விட முடியும். அத்தகைய நவீன தொழில்நுட்பம் தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் பாஸ்டன் நகர ஆராய்ச்சியாளர்கள் உலகின் முன்னணி மருத்துவக் கம்பனி உதவியுடன் ஒரு புதிய ஆய்வை மேற்கொண்டனர்.

அதன் மூலம் மார்பகம் மற்றும் நுரையீரல் உள்ளிட்ட பலவிதமான புற்று நோய்களைக் கண்டறிந்துள்ளனர்.

தற்போது இதே முறையில் உலகின் பல நாடுகளில் இச்சோதனை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இரத்தப் பரிசோதனைக்கு மைக்கிரோசிப் பயன்படுத்தப்படுகிறது.

இந்த சிப் வழியாக இரத்தம் செலுத்தப்படுகிறது. அப்போது புற்றுநோயை ஏற்படுத்தும் செல் அதில் பந்து போன்று ஒட்டிக்கொள்கின்றது. இச்சோதனை புற்று நோயாளிகளின் உடலில் வலியை ஏற்படுத்துவதில்லை.

தற்போது புற்று நோய் பாதிக்கப்பட்டவரின் உடலில் இருந்து சத்திரசிகிச்சை மூலம் தசைகளை எடுத்து பரிசோதனை செய்யப்படுகிறது.

இதனால் அவர்கள் கடும் வலியும் , வேதனையும் அடைகின்றனர். (ஸ்ரீ-2)

## கிளிநொச்சியில் ஆயுதமுனையில் தாலிக்கொடி உட்பட நகைகள் அபகரிப்பு

(கொழும்பு)

கிளிநொச்சி நகருக்கு மிகச் சமீபமாகவுள்ள கனகபுரம் பகுதியில் இரவு ஆயுத முனையில் இளம் பெண்ணின் தாலிக்கொடி உட்பட மேலும் பல நகைகள் கொள்ளையர்களால் அபகரித்துச் செல்லப்பட்டுள்ளன.

யாழ். மாவட்டத்தில் இடம்பெற்றதுபோல் வன்னியிலும் ஆயுதமுனையில் கொள்ளையிடும் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன.

இதேவேளை இத் தெருவிலுள்ள பலசரக்குக் கடை ஒன்றை இரவுவேளை உடைத்து உட்புகுந்த கொள்ளையர்கள் பெறுமதிமிக்க பொருட்களை கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர்.

கடந்த சில மாதங்களாக கிளிநொச்சி கணேசபுரம் மற்றும் நகரையண்டிய பகுதிகளில் நகை, பணம், பொருட்கொள்ளைகள் இடம் பெற்று வருகின்றமை அவதானிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள வற்றாப்பளை, தண்ணீரூற்று, முள்ளியவளைப் பகுதிகளிலும் இவ்வாறான கொள்ளைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாக பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (ஸ்ரீ-2)



வடமாகாண கல்வித்திணைக்களத்தினால் 2011ஆம் கல்வி ஆண்டிற்கான அபிவிருத்தி மற்றும் செயற்றிட்ட திட்டமிடலுக்கான கலந்துரையாடல் யா/கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தில் நேற்று நடைபெற்றது. இந்நிகழ்வில் மேலதிக மாகாண கல்விப்பணிப்பாளர் (கல்வி அபிவிருத்தி) மு.இராதாகிருஸ்ணன், மாகாண பிரதிக்கல்விப் பணிப்பாளர் (திட்டமிடல்) க.ஜெ.பிறட்லி, மாகாண முறைசாராக் கல்விப்பிரிவு உதவிக்கல்விப் பணிப்பாளர் க.நடராஜா, மாகாண விசேட கல்வி இணைப்பாளர் பி.எம்.ஏ.நிஷாந்தி பெர்னாண்டோ ஆகியோர் கலந்துரையாடலை நடத்துவதையும் நிகழ்வில் கலந்துகொண்ட அதிகாரிகளையும் படங்களில் காணலாம். (படங்கள்:-என்.குமார்)

உன் பெற்றோரைக் காட்டிலும் நம்பிக்கை உள்ள நண்பன் இந்த உலகத்தில் இல்லை.
- ஆங்கிலப் பழமொழி

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# மது எனும் நெய் ஊற்றி சிகரெட்டில் அக்கினி வளர்க்கவோ?

தமிழ்ப் பண்பாட்டின் பெருமை பற்றி நாம் பேசும் அதேவேளை, எங்களிடம் இருக்கக் கூடிய பல வீனங்கள் பற்றிச் சிந்திப்பதும் அவசியமாகும்.

பெருமைகளை மட்டுமே பேசும் இனமாகத் தமிழினம் இருந்தமையால்தான் எங்களின் முன்னேற்றங்கள் தடைப்பட்டன என்பதை மறுப்பதற்கில்லை.

எங்களின் பெருமைகளை நாங்கள் பேசுவதை விட மற்றவர்கள் பேசும் போது அது எமக்கு இரட்டிப்பான பெருமை. இருப்பினும் இது விடயத்தில் எங்களின் பண்பாட்டு விழுமியச் செழுமை, எல்லை தாண்டித் தமிழினத்தின் மகிமையைப் பறை சாற்றவில்லை என்றே கூற வேண்டும்.

இவ்வாறு சிறப்பான வாழ்வியல் முறை மந்தமாக அடைபட்டுப் போனமைக்கான காரணங்கள் ஏராளம். அவற்றைப் பகுப்பாய்வு செய்வது இவ்விடத்தில் பொருத்தமில்லை என்பதால் அதனை அப்படியே விட்டு விடலாம்.

ஆனால், உலகம் அனைத்தும் வரவேற்கக் கூடிய தமிழ்ப் பண்பாடு எல்லை தாண்ட முடியாமல் மந்தமடைந்தமையால் - தனக்குத் தானே அது ஆபத்தைத் தேடிக் கொண்டது.

ஆம், உலகின் வெறுப்பான பண்பாடுகள் எல்லை தாண்டின. அத்துடன் நாங்களும் எல்லை தாண்டி அந்தப் பண்பாட்டில் ஊறிக் கொண்டோம்.

அதன் விளைவு இன்று எங்கள் தமிழ்ப் பிரதேசங்களில் மேலைத்தேய கலாசாரக் கோலங்கள் வேரும் விழுதும் ஊன்றத் தொடங்கி விட்டன. தமக்குத் தாம் வகுத்துக் கொண்ட கட்டுப்பாட்டின் கீழ் - உறவுகளின் மேற்பார்வையில் வாழ்ந்த தமிழினத்தை நவீன தகவல் தொழில் நுட்பங்களும், கையடக்கத் தொலைபேசிகளும் சிதறடிக்க, "திறந்த கலாசாரத்தில்" எம் இளம் சமூகம் கலந்து, வாழ்க்கையின் பெறுமானத்தைத் தொலைக்கத் தலைப்பட்டு விட்டது.

இதுபற்றிப் பல தடவைகள் இவ்விடத்தில் குறிப்பிட்டாலும் இன்னமும் மன நிம்மதி ஏற்படவில்லை. இரவு வேளைகளில் யாழ்ப்பாண நகரத்தில் 'மது' என்ற நெய் ஊற்றி, சிகரெட் என்ற அக்கினி வளர்த்து எங்கள் இளம் ஆன்மாக்கள் அழியும் நிலை காணும் போது எங்ஙனம் நிம்மதி காண முடியும்? இது மட்டுமல்ல இதற்கு மேலாக, 'மருத நிலத்து'க் கலாசாரங்களும் தமிழினத்தின் பெரும் புகழை குழி தோண்டிப் புதைக்கின்றன.

எனவே இவை பற்றித் தொடர்ந்து குறை கூறுவதை விடுத்து நடப்பவற்றிற்கு நிவாரணம் தேட முற்பட்டால் அதற்கான ஒரே வழி பெற்றோர்களே தங்கள் பிள்ளைகளின் மிகச் சிறந்த நண்பர்களாக இருப்பதாகும்.

"நான் உனக்குக் கற்பிக்க வேண்டுமாயின் நான் உனது நல்ல நண்பனாக இருக்க வேண்டும்" என்ற ஆங்கிலப் பழமொழியை ஒரு கணம் சிந்தித்தால் நிலைமை புரியும்.

என் செய்வது! தந்தையர்கள் தனையர்களுடன் கதைக்காமல் மன்னராட்சி நடத்தும் மடமைத்தனம் எங்கள் இளம் பிள்ளைகளுக்குப் பாதகமாகி விடுகிறது.

# அரசியல், பொருளியல் கருத்துக்கள் மக்களுக்கு நன்மை தர வேண்டும்

அரசியல், பொருளாதாரக் கருத்துக்கள் நாட்டு மக்களுக்கு நன்மை தரக்கூடியதாக அமைய வேண்டும் என இந்தியாவின் தமிழ்நாட்டு பாண்டிச்சேரி பல்கலைக் கழகப் பீடாதிபதி பேராசிரியர் எம்.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

யாழ்.பல்கலைக் கழகப் புவியியற் துறை விரிவுரை மண்டபத்தில் நேற்று நடைபெற்ற கருத்தரங்கிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்;

உலகளாவிய நிதி நெருக்கடிகளின் விளைவுகளும் அமெரிக்க - சீன நாடுகளுக்கிடையிலான நாணயப் போர்கள் என்ற வகையில் இங்கு கருத்துரை வழங்க வந்துள்ளேன். நிதி நெருக்கடியில் அதாவது உலகப் பொருளாதாரம் தற்போது மிக நெருக்கடியான சூழலில் உள்ளது என்பதை அனைவரும் அறிந்து கொள்ள வேண்டும்.

உலகில் 1971ஆம் ஆண்டு வரை எவ்வளவு நிதி பயன்பாட்டில் இருந்ததோ அது அடுத்த இரண்டு வருடத்தில் அதன் இன்னொரு மடங்காக அதிகரித்து விட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது.

அது மட்டுமின்றி எப்போது ஒரு நாட்டில் பணப் பயன்பாடு அதன் கட்டுப்பாட்டில் இருக்கிறதோ அப்போதுதான் விலைவாசியும் கட்டுப்பாட்டில் இருக்கும். விலைவாசி கட்டுப்பாட்டில் இருக்கும் சந்தர்ப்பத்தில்தான் சாதாரண மக்களும் பொருட்களை நுகர்ந்து கொள்ளும் சூழ்நிலை அந்த நாட்டில் ஏற்படும்.

இவ்வாறு உலகளாவிய ரீதியில் நிதிப் பயன்பாடு முக்கியத்துவம் பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது. இதில் உலக வல்லரசு நாடுகளில் ஒன்றாகத் திகழும் அமெரிக்க நாட்டின் நாணயமான யு.எஸ். டொலர் பயன்பாடு மிக முக்கியம் பெறுகின்றது.

இதேவேளை அமெரிக்காவைப் பொறுத்தவரை வல்லரசு நாடாக இருப்பதோடு அரசியல், பொருளாதாரம் போன்றவற்றில் முன்னிலையில் திகழ்ந்து வருவதால் அதிகமான பணத்தை அச்சிட்டு வெளியிட்டது. இதனால் உலக நாடுகள் அறிந்தோ அறியாமலோ அமெரிக்க டொலரைப் பயன்படுத்த வேண்டியிருந்தது என்றார்.

# 'நாணயப் போர்' பற்றிக் கேள்வி கேட்ட பல்கலைக் கழகம் யாழ்ப்பாணமே

## இந்தியப் பேராசிரியர் புகழாரம்

ஆசியாவிலேயே 'நாணயப் போர்' பற்றி பரீட்சை வினாத்தாளில் கேள்வி கேட்ட பல்கலைக் கழகம் யாழ்.பல்கலைக் கழகம் மட்டுமே என இந்தியாவின் பாண்டிச்சேரி பல்கலைக் கழகப் பீடாதிபதி பேராசிரியர் எம்.சம்பந்தன் புகழாரம் சூட்டியுள்ளார்.

யாழ்.பல்கலைக் கழகப் புவியியற் துறை விரிவுரை மண்டபத்தில் நேற்று நடைபெற்ற கருத்தரங்கிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்;

இதுவரையில் ஆசியாக் கண்டத்தில் நாணயப் போர் தொடர்பாகப் பரீட்சையில் மாணவர்களிடம் கேள்வி கேட்ட பல்கலைக் கழகம் யாழ்.பல்கலைக் கழகம் மட்டுமே. இதன் மூலம் இங்குள்ளவர்களின் அறிவு பூர்வமான, உணர்வு பூர்வமான பொருளா தாரக் கண்ணோட்டம் இந்த மக்களிடம் உள்ளது என்பது உறுதியாகின்றது எனவும் அவர் தெரிவித்தார். (ந-6)

# வன்னி யுத்தத்தில் செய்தி சேகரித்த ஊடகவியலாளர்கள் சாட்சியமளிப்பர்

(கொழும்பு)

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக் கட்ட யுத்தத்தின் போது வன்னிப் பகுதியிலிருந்து செய்தி சேகரித்த இரண்டு ஊடகவியலாளர்கள் கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழு முன்னிலையில் சாட்சிமளிக்கவுள்ளனர்.

ஜனவரி 13ஆம் திகதி வியாழக்கிழமை ரூபவாஹினி தொலைக்காட்சியின் பாதுகாப்பு ஊடகவியலாளர் சமன்குமார ராம விக்ரமவும் ஜனவரி 14ஆம் திகதி வெள்ளிக்கிழமை சுவர்ணவாஹினி தொலைக்காட்சியின் பாதுகாப்பு ஊடகவியலாளர் சானக டி சில்வாவும் நல்லிணக்க ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியமளிக்கவுள்ளனர்.

இறுதிக் கட்ட யுத்தத்தின் போது வன்னிப் பகுதியிலிருந்து நேரடியாகச் செய்திகளைச் சேகரித்தவர்கள் என்ற அடிப்படையில் நல்லிணக்க ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியமளிக்கவே அவர்களுக்கு அழைப்பு விடுத்ததாக ஆணைக்குழுவின் சிரேஷ்ட அதிகாரியொருவர் தெரிவித்தார்.

இதேவேளை அமைச்சர் சம்பிக்க ரணவக்க, நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரர், மேல் மாகாண அமைச்சர் உதய கம்மன்பில் மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஓமல் பே சோபித தேரர் ஆகிய நான்கு பேரைக் கொண்ட ஜாதிக ஹெல உறுமயவின் குழுவும் மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவால் கப்ராலும் இன்று புதன்கிழமை ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியமளிக்கவுள்ளனர்.

ஜனவரி 27ஆம் திகதி மீன்பிடி நீரியல் வள அமைச்சர் ராஜித சேனா ரத்ன, சமூக சேவைகள் அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா மற்றும் நாடாளுமன்ற உறுப்பினரும் சிவில் பாதுகாப்புப் படையின் முன்னாள் பணிப்பாளருமான சரத் வீரசேர ஆகியோர் நல்லிணக்க ஆணைக் குழு முன்னிலையில் சாட்சியமளிக்கவுள்ளனர்.

இதேவேளை பத்தி எழுத்தாளர் மாலிந்த சேனவிரட்ன எதிர்வரும் ஜனவரி 14 ஆம் திகதி ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியமளிக்கவுள்ளனர். (ந-5)

## தலையில் அடித்தனர்; சைக்கிள், சங்கிலி எடுத்தனர்

(கொழும்புத்துறை)

தனியார் கல்வி நிறுவனத்திற்குச் சென்றுவிட்டுத் துவிச்சக்கர வண்டியில் வீடு சென்று கொண்டிருந்த ஆசிரியர் ஒருவரைப் பலமாகத் தாக்கி விட்டு அவரின் துவிச்சக்கர வண்டியையும், தங்கச் சங்கிலியையும் இனந் தெரியாத குழுவொன்று அபகரித்துச் சென்றுள்ளது.

இச்சம்பவம் நேற்றிரவு 8 மணியளவில் நாயன்மார்கட்டு வெய்யிலுகந்தப் பிள்ளையார் கோயிலுக்கு அண்மையில் நடந்துள்ளது.

சம்பவத்தில் கொழும்புத்துறையைச் சேர்ந்த செல்வரத்தினம் கமல்ராஜ் (வயது 24) தனியார் கல்வி நிறுவன ஆசிரியர் தலையில் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## மேயர் பதவிக்கு போட்டியிட மாட்டேன்; மட்டு. மேயர் சிவகீதா

மட்டக்களப்பு மாநகர சபை கலைக்கப்பட்டுத் தேர்தல் நடத்தப்பட்டால் அதில் போட்டியிட மாட்டேன் என மட்டக்களப்பு மாநகர மேயர் சிவகீதா பிரபாகரன் தெரிவித்தார். எனினும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் வெற்றிக்காக உழைப்பேன் என அவர் மேலும் குறிப்பிட்டார்.

மட்டு. மாநகர சபையின் பதவிக் காலம் முடிவடைதற்கு இன்னும் ஒன்றரை வருடங்கள் இருக்கின்றன. இந்நிலையில் மாநகர சபை கலைக்கப்படுமா என்பது தொடர்பில் தெளிவின்மை காணப்படுகின்றது. இந்நிலையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார். (ந-5)

# சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்



பற்றற்றுச் செய்யும் பணியும் தவத்தைப் போன்று கடினமானதுதான்.

இதைப் பழகுவதற்கு முதலில் நல்ல உடல் நிலை வேண்டும். உடலினை உறுதி செய்தல் வேண்டும். சத்து மிக்க உணவை உட்கொண்டு நீங்கள் உங்கள் உடலை வலுவுள்ளதாக ஆக்குதல் வேண்டும். அதன் பின்னரே மனம் வலிமை பெறும். இந்த உடலில் உள்ள மனம் ஒரு நுண்மையான பொருள். மனமும் சொற்களும் நம்முள் தேவ சக்திகளை நிலை பெறச்செய்யும் வலியுடையவனாக இருக்க வேண்டும். நான் தாழ்ந்தவன், நான் கடைப்பட்டவன் இப்படி மீண்டும் மீண்டும் நினைத்து மனிதன் தன்னைத்தானே சிறுமைப்படுத்திக் கொள்கிறான். தானே தன்னைத் தாழ்த்திக் கொள்கிறனான். விடுதலையைப் பற்றி எப்போதும் அக்கறையுடன் சிந்தித்துக் கொண்டிருப்பவனே விடுதலை அடைகிறான். கட்டுண்டவனாகத் தன்னைக் கருதுபவனே பிறந்து பிறந்து இளைக்கிறான். வீரர்களாக விளங்குங்கள். எமக்கு அச்சமில்லை, அச்சமில்லை என்று அறைவீர்களாக! அச்சமே சாவு. அதுவே பாவம். அச்சமே நரகம்; அதுவே மறநெறி. பொருந்தா வாழ்க்கை. இவ்வுலகில் முரணான கருத்துக்களும் எண்ணங்களும் அச்சத்தினின்றே எழுந்துள்ளன. ஆகவே 'அஞ்சாதீர்கள், அஞ்சாதீர்கள்' என்று நான் கூறுகிறேன்.

# ஜனாதிபதி நிதியமைச்சுக்கு விஜயம்



(கொழும்பு)

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்று காலை தமது பொறுப்பின் கீழ் உள்ள நிதியமைச்சுக்கு விஜயம் செய்து அங்கு கடமை புரியும் உயர் அதிகாரிகளையும் ஊழியர்களையும் சந்தித்து கலந்துரையாடினார்.

நிதியமைச்சின் புது வருட செயற்றிட்டங்கள் எப்படி அமையவேண்டும் என்பது தொடர்பில் அவர்கள் மத்தியில் ஜனாதிபதி உரையாற்றினார். இது தொடர்பில் நடைபெற்ற வைபவத்தில் சிரேஷ்ட அமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம, பிரதியமைச்சர் கீதாஞ்சன குணவர்த்தன, நிதியமைச்சின் செயலாளர் கலாநிதி பி.பி.ஜயசுந்தர ஆகியோர் உட்பட மற்றும் பலர் கலந்துகொண்டனர். (ஸ்ரீ-2)


# தென்னாபிரிக்க சுற்றுலா கப்பல் இலங்கையை வந்தடைந்தது

தென்னாபிரிக்காவின் ஓசினியா குறூசஸ் கப்பல் 628 சுற்றுலாப் பயணிகளுடன் நேற்று இலங்கை துறைமுகத்தை வந்தடைந்தது.

இந்தக் கப்பலில் தென்னாபிரிக்க, அவுஸ் திரேலிய, நியூசிலாந்து மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளின் சுற்றுலாப் பயணிகள் அடங்குவதாக சுற்றுலாத்துறை அமைச்சின் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

395 சிப்பந்திகளைக் கொண்ட ஓசினியா குறூ்சஸ் கடந்த டிசம்பர் மாதம் 11 ஆம் திகதி தென்னாபிரிக்காவின் கேப்டவுண் துறைமுகத்தில் இருந்து புறப்பட்டு நேற்று இலங்கை வந்தடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

# பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பு படித்துவரும் பத்து வயது மாணவி



உத்திரப் பிரதேச மாநிலத்திலுள்ள ரக்னோ பல்கலைக்கழகத்தில் 10 வயது மாணவி ஒருவர் பட்டப்படிப்பு படித்து வருகிறார்.

இம் மாநிலத்தில் வசிக்கும் தேஜ் பகதூர் சாயாதேவியின் மகள் சுஷ்மா. தற்போது 10 வயதாகும் இந்த மாணவிக்கு அபூர்வமான கல்வித் திறமை இருப்பது கண்டு அப் பெண்ணின் பெற்றோர் வீட்டிலிருந்தே படிக்க வைத்தனர். இதனால் தனது ஏழாவது வயதில் 10 ஆம் வகுப்பு தேர்வையும் இந்த ஆண்டில் பிளஸ் 2 தேர்வையும் எழுதி சித்தியடைந்து விட்டாள். இதையடுத்து சுஷ்மா லக்னோ பல்கலைக் கழகத்தில் பட்டப்படிப்புப்படிக்க அனுமதி கேட்டு லக்னோ பல்கலைக்கழகத்தில் விண்ணப்பித்தார். அவரது விண்ணப்பத்தை பரிசீலித்த லக்னோ பல்கலைக்கழகம் சுஷ்மாவுக்கு தற்காலிக அடிப்படையில் அனுமதி வழங்கியுள்ளது.

தற்போது உ.பி.யில் உள்ள கல்லூரி ஒன் றில்.பி.எஸ்.சி. அறிவியல் பாடத்தில் சுஷ்மா சேர்ந்துள்ளார்.

அதேபோல் சுஷ்மாவின் சகோதரன் சைலேந்திரா கடந்த 2007 ஆம் ஆண்டில் தனது 14 ஆம் வயதில் கணனி விஞ்ஞான பட்டப்படிப்பை முடித்து சாதனை செய்துள் ளமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

# பத்தொன்பது ஆண்டுகளுக்கு பின்னர் ஐ.நா. பாதுகாப்பு சபையில் இந்தியா

ஐ.நா. பாதுகாப்பு சபையில் தற்காலிக உறுப்பினராக இந்தியா நேற்று முன்தினம் பொறுப்பேற்றது. 19 ஆண்டுகளுக்குப் பின்னர் இந்தப் பொறுப்பு இந்தியாவுக்குக் கிடைத்துள்ளது. இரண்டு ஆண்டுகாலம் இந்தியா இந்தப் பொறுப்பை வகிக்க முடியும். ஏற்கனவே 7 முறை இதுபோன்ற தற்காலிக உறுப்பினராக இந்தியா தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

இந்தாண்டின் ஓகஸ்ட் மற்றும் அடுத்தாண்டின் நவம்பர் மாதங்களில் பாதுகாப்பு சபைக்கு இந்தியா தலைமைப் பொறுப்பேற்கும். ஐக்கிய நாடுகள் சபை பாதுகாப்பு சபையில் 19 ஆண்டுகளுக்குப் பின் இந்தியா நேற்று முன்தினம் அதிகார பூர்வமாக நிரந்தரம் அல்லாத உறுப்பினராகப் பொறுப்பேற்றுக் கொண்டது.

இரண்டாண்டு காலம் இந்தப் பொறுப்பில் நீடிக்கும். இந்தியாவுடன் ஜேர்மனி, தென் ஆபிரிக்கா, கொலம்பியா மற்றும் போத்துக்கல் நாடுகளும் பொறுப்பேற்றுக் கொள்கின்றன.

ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு நாடு பாதுகாப்பு சபையில் தலைமைப் பொறுப்பேற்கும். அது ஆங்கில எழுத்தின் அகர வரிசைப்படி அமையும். அதன்படி இந்தாண்டு ஓகஸ்ட் மற்றும் அடுத்தாண்டு நவம்பர் ஆகிய இரு மாதங்களில் இந்தியா தலைமைப் பொறுப்பேற்கும். நிரந்தரம் அல்லாத உறுப்பினர் பதவிக்கு இந்தியா இதுவரை ஏழுமுறை பொறுப்பேற்றுள்ளது.

பயங்கரவாதச் செயல்களுக்கு எதிரான நடவடிக்கைகள், ஐ.நா. அமைதிப் படை விவகாரம் மற்றும் மனித உரிமை செயற்பாடுகள் ஆகியவற்றுக்கு பாதுகாப்பு சபையில் அதிக முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது.

பயங்கரவாதம் உலகளாவிய நிலையில் வளர்ந்துள்ள இன்றைய காலகட்டத்தில் இந்தியாவுக்கு கிடைத்துள்ள இந்தப் பதவி பயங்கரவாதத்திற்கு எதிரான அதன் நடவடிக்கைகளை உலகம் அறிந்து கொள்ள உதவிடும்.

இது குறித்து ஐ.நா.வுக்கான இந்தியாவின் நிரந்தர தூதர் ஹர்தீப் சிங் புரி கூறுகையில்,

நமது முக்கிய இலக்கு பயங்கரவாத பிரச்சினைதான். எதிர்வரும் மாதங்களில் சபையுடன் இணைந்து அதற்கான நடவடிக்கைகளை இந்தியா முன்னெடுக்கும் என்றார். (ஸ்ரீ-2)

# வெள்ளவத்தையிலுள்ள நகைக்கடையில் பெருமளவு தங்கநகைகள் கொள்ளை

(கொழும்பு)

வெள்ளவத்தையில் உள்ள நகைக் கடை ஒன்றில் பெருமளவான தங்கநகைகள் கொள்ளையிடப்பட்டுள்ளன.

வெள்ளவத்தை காலி வீதியில் அமைந்துள்ள 189 ஆம் இலக்க நகைக் கடையிலேயே இக் கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக வெள்ளவத்தை பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

குறித்த சம்பவம் நேற்று முன்தினம் அதிகாலை இடம்பெற்றதாகவும் சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ஸ்ரீ-2)

# உணவு நஞ்சாகியமையால் 200 பேர் வைத்தியசாலையில்

(கொழும்பு)

உணவு விஷமானதன் காரணமாக நோய் வாய்ப்பட்ட சுமார் 200 பேர் வைத்தியசாலையில் நேற்று அனுமதிக்கப்பட்டனர் என நீர்கொழும்பு வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

இவர்களில் 39 பேர் மேலதிகச் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என நீர்கொழும்பு வைத்தியசாலையின் மருத்துவ அத்தியட்சகர் சனத் கல்கமுவ தெரிவித்துள்ளார்.

குறிப்பிட்ட உணவின் மாதிரிகளும் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. இது தொடர்பில் நீர்கொழும்புப் பொலிஸாரும் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஸ்ரீ-2)



தமிழகத்துக்கு விஜயம் மேற்கொண்ட இந்திய பிரதமர் மன்மோகன் சிங்கை சென்னை ராஜ்பவனில் முதல்வர் கருணாநிதி வரவேற்பதை படத்தில் காணலாம்.

# தென் ஆபிரிக்காவில் காந்தி வாழ்ந்த வீட்டை வாங்க இந்தியா முயற்சி

(ஜோகனஸ்பார்க்)



தென்னாபிரிக்காவில் காந்தி வாழ்ந்த வீட்டை வாங்கி நினைவுச் சின்னமாக்க இந்தியா முயற்சி செய்து வருகிறது. மகாத்மா காந்தி தென்னாபிரிக்காவில் சில காலம் தங்கியிருந்து சட்டத்தரணியாக தொழில் புரிந்தார்.

அப்போது கடந்த 1908 முதல் 1910 ஆம் ஆண்டு வரை ஜோகன்ஸ்பார்க் நகரில் உள்ள ஒரு வீட்டில் தங்கியிருந்தார்.

அந்த வீடு கடந்த 2009 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் ஏலத்தில் விடப்பட்டது. அதை இந்திய நிலக்கரி நிறுவனம் வாங்க முயற்சி செய்தது. ஆனால் அதை பிரான்ஸ் சுற்றுலா நிறுவனம் ஒன்று ஒரு கோடியே 75 இலட்சத்துக்கு ஏலம் எடுத்தது.

எனவே அப்போது அந்த வீட்டை வாங்க முடியவில்லை. இந்த நிலையில் அந்த வீட்டை ஏலத்தில் எடுத்த நிறுவனம் பத்திரப் பதிவு செய்யாமல் கிடப்பில் போட்டுள்ளது.

இதைத் தொடர்ந்து அந்த வீட்டை மீண்டும் விலைக்கு வாங்க இந்திய நிலக்கரி நிறு வனம் முடிவு செய்துள்ளது. இதற்கான முயற்சியில் நிலக்கரித்துறை மந்திரி ஸ்ரீபிரகாஷ் ஜெய்ஸ்வால் ஈடுபட்டுள்ளார்.

மேலும் அந்த வீட்டை நினைவுச் சின்ன மாக மாற்றவும் திட்டமிடப்பட்டுள்ளது. காந்தி கடந்த 1893 ஆம் ஆண்டு ஒரு வழக்கில் ஆஜராகி வாதாட தென்னாபிரிக்காவில் உள்ள விக்டோரியாவுக்குச் சென்றார். சத்தியாக்கிரகப் போராட்டம் தென்னாபிரிக்காவில் காந்தி பெயரில் பல நினைவுச் சின்னங் கள் உள்ளன.

ஜோகனஸ்பர்க் மத்திய பகுதியில் காந்தி சதுக்கமும் போராட்டத்தின் போது கைது செய்யப்பட்டு அடைக்கப்பட்ட ஜோகன்ஸ்பர்க் சிறை போன்றவை உள்ளன.

அதேபோன்று டர்பன் நகரிலும் பல இட ங்கள் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

# ஜோன்சனின் துணிச்சலில் ஆஸி. கௌரவம்; இங்கிலாந்து அணி சுமாரான ஆரம்பம்



(சிட்னி)

ஸ்ரொரஸ், குக் சிறப்பான ஆரம்பத்தை வழங்க இங்கிலாந்து அணி நேற்றைய இரண்டாம் நாள் ஆட்ட நேர முடிவில் 3 விக்கெட்டுக்களையிழந்து 167 ஓட்டங்களை எடுத்தது.

கிரிக்கெட் அரங்கில் பரம எதிரிகளான அவுஸ்திரேலியா-இங்கிலாந்து அணிகள் மோதும் 5 போட்டிகள் கொண்ட ஆஷஸ் டெஸ்ட் தொடர் அவுஸ்திரேலியாவில் நடைபெறுகின்றது.

இதில் முதல் நான்கு போட்டிகளின் நிறைவில் இங்கிலாந்து அணி தொடரில்2:1 என்ற கணக்கில் முன்னிலையிலுள்ளது. இந்நிலையில் ஐந்தாவதும் இறுதியுமான டெஸ்ட் நேற்று முன்தினம் சிட்னியில் ஆரம்பமானது.

இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி நேற்று முன்தினம் முதல் நாள் ஆட்ட நேர முடிவில் 4 விக்கெட்டுக்களையிழந்து 134 ஓட்டங்களை எடுத்தது.

இந்நிலையில் இரண்டாம் நாளான நேற்று தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணிக்குக் ஹடின் 6, ஹசி 33, சிமித் 18, சிடில் 2 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து ஏமாற்றமளித்தனர்.

எனினும்9ஆவதுவிக்கெட்டுக்காகஇணைந்த ஜோன்சன், ஹில்பென் ஹயூஸ் ஜோடி சிறப்பான இணைப்பாட்டத்தை வழங்கிக் கைகொடுத்தனர்.

இதில் ஜோன்சன் 66 பந்துகளில் (6 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் உட்பட) 53 ஓட்டங்களையும் ஹில்பென் ஹயூஸ் 58 பந்துகளில் (3 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் உட்பட) 34 ஓட்டங்களையும் எடுக்க அவுஸ்திரேலிய அணி சகல விக்கெட்டுக்களையுமிழந்து 280 ஓட்டங்களை எடுத்தது.

பந்துவீச்சில் அன்டர்ஷன் 4, பிரேஷ்மன் 3 விக்கெட்டுக்களையும் திரீம்லெற், சுவான், கொலின் வூட் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

தொடர்ந்து முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணிக்கு ஸ்ரொரஸ், குக் ஜோடி சிறப்பான ஆரம்பத்தை வழங்கினர்.

இந்த ஜோடி முதலாவது விக்கெட்டுக்காக 98 ஓட்டங்களை இணைப்பாட்டமாக எடுத்த போது அணித் தலைவர் ஸ்ரொரஸ் 58 பந்துகளில் (8 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் உட்பட) 60 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்துக் களமிறங்கிய திரோட் பூச்சியத்துடன் ஆட்டமிழந்தார்.

எனினும் மூன்றாவது விக்கெட்டுக்காக இணைந்த குக் - பீற்றர்சன் ஜோடி சிறப்பான இணைப்பாட்டத்தை வழங்கினர்.

இதில் கெவின் பீற்றர்சன் 70 பந்துகளில் (4 பவுண்டரிகள் உட்பட) 36 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க இங்கிலாந்து அணி நேற்றைய இரண்டாம் நாள் ஆட்ட நேர முடிவில் 3 விக்கெட்டுக்களையிழந்து 167 ஓட்டங்களை எடுத்தது.

இதில் குக் 61 ஓட்டங்களுடனும் அண்டர்சன் ஒரு ஓட்டத்துடனும் ஆட்டமிழக்காமல் களத்திலுள்ளனர்.

பந்து வீச்சில் ஜோன்சன் 2 விக்கெட்டுக்களையும் ஹில்பென் ஹயூஸ் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர். இப்போட்டியின் மூன்றாம் நாள் ஆட்டம் இன்றாகும்.

# டெண்டுல்கர் சதமடித்து கைகொடுத்தார் இந்தியா முதல் இன்னிங்ஸில் சாதித்தது



(கேப்டவுன்)

டெண்டுல்கர் சதமடித்துக் கைகொடுக்க இந்திய அணி முதலாவது இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையுமிழந்து 364 ஓட்டங்களை எடுத்தது.

தென்னாபிரிக்காவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இந்திய அணி 3 டெஸ்ட், ஒரே ஒரு இருபது-20 மற்றும் 5 ஒரு நாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகின்றது.

இதில் முதலிரண்டு டெஸ்ட் போட்டிகளின் முடிவில் இரு அணிகளும் தலா ஒன்றில் வெற்றி பெறத் தொடர் சமநிலையிலுள்ளது.

இந்நிலையில் தீர்க்கமான மூன்றாவதும் இறுதியுமான டெஸ்ட் கடந்த 2ஆம் திகதி கேப்டவுனில் ஆரம்பமானது.

இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இந்திய அணித்தலைவர் தோனி முதலில் களத் தடுப்பைத் தீர்மானித்தார்.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி முதலாவது இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 362 ஓட்டங்களை எடுத்தது.

இதில் ஜக்கலிஸ் 161 ஓட்டங்களையும் அம்லா 59, பிரின்ஸ் 47 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்து வீச்சில் சிறிசாந்த் 5 விக்கெட்டுக்களையும் சகீர் கான் 3 விக்கெட்டுக்களையும் இஷாந்த் சர்மா 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

தொடர்ந்து முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி நேற்று முன்தினம் இரண்டாம் நாள் ஆட்ட நேர முடிவில் 2 விக்கெட்டுக்களையுமிழந்து 142 ஓட்டங்களை எடுத்தது.

இந்நிலையில் மூன்றாம் நாளான நேற்று தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய இந்திய அணி டெண்டுல்கரின் சதத்தின் மூலம் முதலாவது இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 364 ஓட்டங்களை எடுத்தது.

இதில் தனது 51ஆவது டெஸ்ட் சதத்தைப் பூர்த்தி செய்த சச்சின் டெண்டுல்கர் 314 பந்துகளில் (17 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள் உட்பட) 146 ஓட்டங்களையும் எடுத்துள்ளார்.

கௌதம் காம்பீர் 93, ஹர்பஜன் சிங் 40, சகீர் கான் 23 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்து வீச்சில் ஸ்ரையன் 5 விக்கெட்டுக்களையும் மோனி மோர்கல் 2 விக்கெட்டுக்களையும் ஹரிஸ் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இதன் மூலம் முதலாவது இன்னிங்ஸில் 2 ஓட்டங்கள் பின்னிலையில் இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி நேற்றைய மூன்றாம் நாள் ஆட்ட நேர முடிவில் 2 விக்கெட்டுக்களையிழந்து 52 ஓட்டங்களை எடுத்தது.

இதில் சிமித் 29 ஓட்டங்களுடனும் ஹரிஸ் பூச்சியத்துடனும் ஆட்டமிழந்ததுடன் பீற்றர்சன் 22 ஓட்டங்களுடனும் அம்லா ஓட்டமெதனையும் எடுக்காமலும் ஆட்டமிழக்காமல் களத்தில் உள்ளனர்.

பந்து வீச்சில் ஹர்பஜன் சிங் 2 விக்கெட்டுக்களைச் சாய்த்தார். இப்போட்டியின் நான்காம் நாள் ஆட்டம் இன்றாகும்.

# குடும்பஸ்தரை காணவில்லை உரும்பிராயில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

ஐந்து பிள்ளைகளின் தந்தையைக் காணவில்லையென முறையிடப்பட்டுள்ளது.

உரும்பிராய் யோகபுரத்தைச் சேர்ந்த ஐந்து பிள்ளைகளின் தந்தையை கடந்த முதலாம் திகதி முதல், ஆணைக்குழுவின் யாழ்ப்பாண அலுவலகத்தில் காணாமல் போனவரின் சகோதரியினால் முறையிடப்பட்டுள்ளது.

உரும்பிராய் யோகபுரத்தில் வசிக்கும் மகாலிங்கம் அமிர்தராசா (வயது 35) என்பவரே காணாமல் போனவராவார்.

வேலை முடிந்து வழமை போல வீடு திரும்புபவர் இதுவரையில் வீடு திரும்பவில்லை என்று மேற்படி முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-5)

# விபத்தில் காயம்

(கொழும்புத்துறை)

நல்லூர் கைலாச பிள்ளையார் கோயிலுக்கு அண்மையில் பிக்கப் வாகனமும் மோட்டார் சைக்கிளும் விபத்துக்குள்ளானது.

இதில் மோட்டார் சைக்கிளில் சென்ற யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியைச் சேர்ந்த எஸ்.குணநாயகம் (வயது-56) என்பவரே காயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்படுள்ளார். (ந-5)

# யாழ்ப்பாண...

எதிர்க் கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க கோரிக்கை விடுத்தார்.

இது மிகக் பாரதூரமான விடயமெனக் கூறிய எதிர்க்கட்சித்தலைவர் இது குறித்து நாடாளுமன்றத்தில் முழுநாள் விவாதம் ஒன்று நடத்தப்பட வேண்டும் எனவும் கூறினார். கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் இவ் விவகாரத்தை எழுப்பப் போவதாகவும் அவர் தெரிவித்தார். (ந-5)

# 300 இலங்...

புகலிடம் கோருவதனை பிரதான இலக்காக கொண்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

கடுமையான பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் இலங்கையுடன் இணைந்து சட்டவிரோத குடியேற்றக்காரர்களின் நடவடிக்கைகளை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ந)

# உலகக் கிண்ணத் தொடருக்கு சிறந்த அணி தெரிவாக வேண்டும்

## ஜனாதிபதி மகிந்த வலியுறுத்து

2011ஆம் ஆண்டு உலக கிண்ண கிரிக்கெட் போட்டிகளில் கலந்து கொள்ள திறமை வாய்ந்த இலங்கை அணியை தெரிவு செய்ய வேண்டியதுகிரிக்கெட்தெரிவுக்குழுவின்பொறுப்பு என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இடைக்கால கிரிக்கெட் நிர்வாக அதிகாரிகள் குழுவை நேற்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அலரி மாளிகையில் சந்தித்த போதே இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

உலக கிண்ணத்தை இலங்கை சுவீகரிக்க வேண்டும் என்பதே அனைவரினதும் எதிர்பார்ப்பதாகத் தெரிவித்த ஜனாதிபதி இதற்காக கிரிக்கெட் வீரர்களின் மன தைரியத்தை ஊக்குவிக்க வேண்டும் எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

தனிப்பட்டவர்களின் தேவைகளுக்காக வீரர்களை விலக்காது சிறந்த 15வீரர்களை தெரிவு செய்வது தெரிவிக்குழுவின் தலையாய கடமை என ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

இதுதவிர போட்டிகள் இடம் பெறவுள்ள மைதானங்களின் புனரமைப்பு பணிகள் மற்றும் வீரர்களின் தங்குவதற்கான இடங்கள் தொடர்பாக ஜனாதிபதி இடைக்கால நிர்வாகக் குழுவிடம் கேள்வி எழுப்பியுள்ளார்.

# முகமாலையில் நேற்று மாலை பயணிகள் பஸ் தடம் புரண்டது

(யாழ்ப்பாணம்)

ஏ-9 பாதையூடாக வவுனியாவிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு வந்து கொண்டிருந்த இலங்கை போக்குவரத்துச் சபை பஸ் ஒன்று பாதையை விட்டு விலகிச் சென்று தடம் புரண்டது.எனினும் பயணிகள் உயிரிழப்பின்றி தப்பினர்.

இச்சம்பவம் நேற்று மாலை முகமாலைப் பகுதியில் இடம்பெற்றுள்ளது. ஏ-9 பாதையால் பஸ்ஸை செலுத்திச் செல்ல தாம் பெரும் அவதியுறுவதாக தெரிவிக்கும் சாரதிகள் இதனால் தாம் கடும் இழப்புக்களைச் சந்திப்பதாகவும் கூறுகிறார்கள்.

இதேவேளை ஏ-9 பாதையில் குன்று குழிகளை மீண்டும் பூசி மெழுகும் பணி ஆரம்பிக்கப்பட்டிருப்பதால் அவை சில நிமிடங்களிலேயே பெயர்ந்து போகின்றன எனவும் சாரதிகள் கவலை வெளியிட்டுள்ளனர். (ந-5)

# குடாநாட்டில் இடம்பெறும் சம்பவங்...

யுத்தத்தின் வடுக்களில் இருந்தும், அவலங்களில் இருந்தும், துயரங்களில் இருந்தும் எமது மக்கள் மீட்டெடுக்கப்பட்டிருக்கின்றார்கள்.

அதற்காக, நான் ஜனாதிபதி மகிந்தராஜபக்ஷ அவர்களுக்கும், பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ அவர்களுக்கும், படைத்தரப்பினருக்கும் பல தடவைகள் நன்றி தெரிவித்து வந்திருக்கின்றேன்.

ஆனாலும், இனி இங்கு யுத்தமும் இல்லை, இரத்தம் சிந்தும் நிலையும் இல்லை என்ற நம்பிக்கையோடு காத்திருந்த எமது மக்களின் நம்பிக்கைகள் சிதைக்கப்படும்படியாக சில சம்பவங்கள் அரங்கேறி வருகின்றன.

இதனால் எமது மக்கள் மறுபடியும் ஓர் அச்சம் தரும் சூழலுக்குள் வாழ்வதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளார்கள்.

மறுபடியும் எமது வாழ்விடங்கள் இரத்தம் சிந்தும் பூமியாக மாறிவிடப் போகின்றது எனும் வதந்திகளும் ஆங்காங்கே திட்டமிட்ட வகையில் பரப்பப்பட்டு வருகின்றன.

அப்பாவி மக்கள் எதை நம்புவது? எதை நம்பாமல் இருப்பது? என்று திகைத்துக் கொண்டிருக்கின்றார்கள். ஏங்கிக் கொண்டிருக்கின்றார்கள்.

இது எமது மக்கள் சமூகத்தின் ஒரு மனிதாபிமான பிரச்சினை. அதற்காகவே நான் இந்த விடயத்தை இந்த சபையின் கவனத்திற்கு எடுக்க விரும்புகின்றேன்.

எமக்கு வாக்களித்த மக்கள் என்பதற்காகவோ, அன்றி எமது அரசாங்கத்திற்கு சர்வதேச ரீதியில் அபகீர்த்தி உருவாகிவிடும் என்பதற்காகவோ நான் இதை தெரிவிக்க வரவில்லை. அது அடுத்த பட்சமான பிரச்சினை.

சகல மக்களும் இங்கு அச்சமின்றி ஒரு ஜனநாயக சூழலில் சம உரிமையோடு முகம் உயர்த்தி வாழ வேண்டும் என்பது எமது விருப்பங்களாகும். இதை பிரதான நோக்கமாகக் கொண்டு இது குறித்த விடயங்களை நாம் இந்த சபையின் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகின்றேன்.

மக்களின் அவலங்களை வைத்து அரசியல் நடத்துவதற்கு நான் ஒருபோதும் விரும்பியிருக்கவில்லை. ஆனால் இதைவைத்து சிலர் அரசியலாபம் தேடுவதற்குக் கூட முயற்சிக்கலாம்.

ஆனால், நாங்கள் அப்படியானவர்கள் அல்ல என்பது சகலருக்கும் தெரிந்தவிடயம். கடந்த காலங்களில் உருவாகிவந்த பல நல்ல சூழ்நிலைகள், சந்தர்ப்பங்கள் இங்கு சரியாகப் பாதுகாக்கப்படவில்லை. சரியாகப் பயன்படுத்தப்படவில்லை.

இன்று மாறி வந்திருக்கும் சூழல் என்பது வரலாற்றில் ஒரு போதும் நடந்திருக்காத மாற்றம் ஆகும். கடந்த கால அனுபவங்களில் இருந்து கற்றுக்கொண்டு இன்று கிடைத்திருக்கும் இந்த சூழலை பாதுகாக்க வேண்டும். இதற்கான ஒரு கூட்டுப் பொறுப்பானது சகலருக்கும் உண்டு.

யாழ்ப்பாணம் சங்கானையில் நடந்த குருக்கள் வீட்டுக் கொலை, கொள்ளை சம்பவத்தில் ஈடுபட்டவர்களை கண்டுபிடித்த பாதுகாப்புத் தரப்பினர் அதேபோன்று யாழ். குடாநாட்டில் நடந்து முடிந்த அனைத்து சம்பவங்களுக்கு மான சூத்திரதாரிகளையும் கண்டுபிடிக்க வேண்டும். கண்டுபிடிப்பார்கள் என்று நம்புகின்றேன். அவர்கள் யாராக இருப்பினும் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு தண்டிக்கப்பட வேண்டும்.

இது தவிர கடத்திச் செல்லப்பட்டவர்கள் தமது உயிர் மற்றும் உடல் சேதங்களின்றி வீடு திரும்ப நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

வன்முறைச் சம்பவங்களில் ஈடுபடுவோர் என்று யார் மீதாவது சந்தேகங்கள் உருவாகும் பட்சத்தில் ஆதாரங்களோடு அவர்களைக் கைது செய்யவோ அல்லது நீதி விசாரணைக்கு உட்படுத்தவோ இந்த நாட்டின் பாதுகாப்புத் தரப்பினருக்கும் நீதித்துறையினருக்கும் சட்ட ரீதியிலான அதிகாரம் உண்டு.

அந்த அதிகாரங்களை பயன்படுத்தி நடந்து வருகின்ற வன்முறைச் சம்பவங்களைத் தடுத்து நிறுத்தவும் நடந்து முடிந்தவற்றுக்கான நீதி விசாரணைகளை மேற்கொள்ளவும் கடத்திச் செல்லப்பட்டவர்கள் தங்களது வீடுகளுக்குத் திரும்பவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

ஆகவே, இந்த மனிதாபிமான பிரச்சினையை ஒரு மக்கள் சமூகத்தின் சார்பாகவும், இந்த நாட்டை வன்முறைகள் அற்ற ஒரு ஜனநாயக பூமியாக உயர்த்தவேண்டும் என்று விரும்பி உழைக்கும் பொறுப்பு வாய்ந்த அமைச்சர்களில் ஒருவன் என்ற வகையிலும் இந்த சபையின் மேலான கவனத்திற்கு கொண்டுவருகின்றேன்.

இதேவேளை மக்கள் மத்தியில் உருவாகி வரும் பதற்றங்களை மேலும் தூண்டும் வகையில் யாரும் கருத்துக்களை அல்லது அறிக்கைகளை வெளியிட்டு எமது மக்களை மேலும் அச்சம் தரும் சூழலுக்குள் தள்ளிவிடும் நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டாம் என்றும் ஊடகங்கள் இது குறித்த விடயங்களுக்கு களம் அமைத்துக்கொடுக்காமல் பொறுப்புணர்ச்சியோடு செயற்பட முன்வர வேண்டும் என்றும் நான் இந்த சபையில் கேட்டுக் கொள்கின்றேன்.

உண்மைகளை மட்டும் வெளியில் கொண்டுவருவதற்கு யாருக்கும் சுதந்திரம் உண்டு என்பதையும் இந்த சபையில் நாம் தெரிவிக்க விரும்புகின்றேன்.

இதேவேளையில் அச்சத்தில் உறைந்து போயிருக்கும் சகல மக்களுக்கும் நம்பிக்கை தெரிவித்து நல்லதே நடக்கும், நடக்க வைப்போம், நம்பிக்கையோடு காத்திருங்கள் என்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்கள் மீது நம்பிக்கை கொண்டு உறுதியளிக்கின்றேன் என்றார். (ந)

# இனப்பிரச்சினைக்குத் தீர்வு...

இத் தீர்வுத்திட்ட முயற்சிகள், சந்திப்புக்கள், பேச்சுக்கள் யாவும் அரசியலமைப்பின் 13 ஆவது திருத்த சட்டத்தை அடிப்படையாக கொண்டதாகவே அமையும். இதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இனப்பிரச்சினை தீர்வு விடயத்தில் அரசுடன் பேச்சு நடத்துவதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எடுத்துவரும் முயற்சிகள் தொடர்பாக அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல மேலும் தெரிவிக்கையில்,

இனப்பிரச்சினை தீர்வு என்று வருகின்ற போது கூட்டமைப்புடன் மட்டும் பேசமுடியாது. அந்த விடயத்துடன் அக்கறையுள்ள அனைத்து தரப்பினருடனும் பேச்சு நடத்த வேண்டியது அவசியமாகும். இத்தகையப் பேச்சுக்கு அரசாங்கம் தயாராகவே உள்ளது.

அரசாங்கம் திறந்த மனதுடன் இந்த விடயம் தொடர்பில் அக்கறை கொண்டுள்ள அனைத்துப் பகுதியினரிடமும் பேச்சு நடத்தும். ஆனால் இது தொடர்பான பேச்சுக்களும் சந்திப்புக்களும் அரசியலமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்திற்கு அமையவாகவே இடம்பெறும்.

அதாவது வரையறுக்கப்பட்ட குறைந்தளவிலான பொலிஸ் அதிகாரங்களும் வழங்கப்படுவதற்கான சாத்தியங்களும் உள்ளன. இந் நிலையில் அரசாங்கத்தின் நிலைப்பாடு இது தான்.

இதனை இதற்கு முன்னரும் நாங்கள் தெளிவாக கூறியுள்ளோம் எனத் தெரிவித்தார்.

இது இவ்வாறிருக்க, இனப்பிரச்சினைக்கு அனைத்து தமிழர் தரப்பாலும் ஏற்றுக்கொள்ளப்படத்தக்க தீர்வு யோசனைகளை தயாரிக்கும் வகையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் தமிழ்க் கட்சிகளின் அரங்கமும் ஒன்றிணைந்து ஆறு பேர் கொண்ட உப குழுவொன்றை அமைத்துள்ளன.

இந்தக்குழுவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, சுரேஷ் பிரேமச்சந்திரன், எம்.சுமந்திரன் ஆகியோரும் தமிழ்க்கட்சிகளின் அரங்கத்தின் சார்பில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரி, புளொட்டின் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன், ஈ.பி.டி.பியின் சார்பில் முன்னாள் எம்.பி இராசமாணிக்கம் ஆகியோரும் இடம்பெற்றுள்ளனர்.

இந்தக்குழு இவ்வாரம் கூடி தீர்வு யோசனை குறித்து ஆராயவுள்ளது. இந்த நிலையிலேயே அரசாங்கத்துடன் தீர்வு குறித்து பேச்சுவார்த்தை நடத்த கூட்டமைப்புத் தயார் என்று சுரேஷ் பிரேமச்சந்திரன் எம்.பி. தெரிவித்திருந்தார்.

இனப்பிரச்சினைத் தீர்வுக்கு முன், தமிழ்க் கட்சிகள் மத்தியில் ஒற்றுமை ஏற்படுவது அவசியம் என கடந்த ஒக்டோபர் மாதமளவில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்திருந்தார். தமிழ் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் பெரும்பாலான கட்சிகள் ஒன்றிணைந்து கருத்தொருமித்த தீர்வு யோசனைகள் குறித்து ஆராய்ந்து வரும் நேரத்தில் இது தொடர்பாக சகல தரப்பினருடனும் பேச வேண்டும் என அரசு கூறுவது சிக்கலை ஏற்படுத்தும் என அரசியல் ஆய்வாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர். (ந-5)

# உள்ளூராட்சி...

தலைமையில் ஆரம்பிக்கப்பட்டபோது இந்த சட்டமூலத்தை உள்ளூராட்சி அமைச்சர் ஏ.எல்.எம். அதாவுல்லா சமர்ப்பித்துள்ளார். (ந-5)

# பிரதம நீதி...

எனினும் இந்த செய்திகள் அடிப்படையற்றவை என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. பிரதம நீதியரசரின் இராஜினாமா செய்தி தொடர்பில் எதிர்க் கட்சித் தலைவர் நாடாளுமன்றில் கேள்வி எழுப்பியுள்ளார்.

இந்த செய்திகளில் எவ்வித உண்மையும் கிடையாது எனவும், இந்தச் செய்திகள் பிழையானவை எனவும் அவைத் தலைவர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

அரசியல் ரீதியாக வங்குரோத்து அடைந்துள்ள ஐக்கிய தேசியக் கட்சி போலியான வதந்திகளை பரப்பி வருவதாகவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார். (ந-5)


கலை, வர்த்தக, கணித, உயிரியல்
A/L 2013
ஆரம்பம்: ஜனவரி 8
காலை 8
புதிய அனுமதிகள் இன்று முதல்
NEC பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

A/L 2013
கலை, வர்த்தகப் பிரிவுகள்
ஜனவரி – 08
காலை – 08.00
DMI

நிரு ரீயூசன் சென்ரர்
கோண்டாவில்
A/L 2013
கலை வர்த்தக பிரிவு
ஆரம்பம்: ஜனவரி–9
ஞாயிறு காலை 8 மணி
(3326)

A/L 2013
கலை, வர்த்தக, கணித விஞ்ஞானம்
05.01.2011
புதன் மாலை 4.30
SUBRA
சித்தன்கேணி – வட்டுக்கோட்டை

தையல் தெரிந்த பெண் பிள்ளைகள்
தேவை
றொசானி காமன்சிக்கு தையல் தெரிந்த பெண் பிள்ளைகள் தேவை. தூரத்தில் இருந்து வருபவருக்கு தங்குமிடவசதி செய்து கொடுக்கப் படும்.
தொடர்பு:- 263/1, இராஜகாரிய லேன், மானிப்பாய் வடக்கு, மானிப்பாய்.
கிளை: சபாபதிப்பிள்ளை வீதி, உடுவில் கிழக்கு, சுன்னாகம்.
(3352)

நியூ சிற்றி றேடேர்ஸ்
நியூ சிற்றி றேடேர்ஸ் மலிவு விற்பனை 15/01/2011 வரை. சொனி, பனசொனிக், ரொசிபா, சன்னியோ, எல்ஜி, 14, 21, 25, 29 கலர் ரீவி, DVD பிளேயர், ரிசீவர், கசற் றெக்கோடர், றேடியோ, சுவர், மேசை மணிக்கூடு, அம்பிளிவயர், லாவஸ், சாச்சர் லைற், சாச்சர் டோச், றைஸ் குக்கர், காஸ் குக்கர், பிரசர் குக்கர், கிரைண்டர், எலக்ரிக் கேற்றல், ஸ்ரப்பிளைசர், பிரட்டொசர் ஆகியவற்றை மலிவு விலையில் பெற்றுக் கொள்ளவும் சிறந்த முறையில் திருத்திக் கொள்ளவும் நாடுங்கள்.
நியூ சிற்றி றேடேர்ஸ்
319 A, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
T.P.:- 0212223226
C-2047

சாமியே சரணம் ஐயப்பா

கந்தர்மடம் ஸ்ரீ ஐயப்பன் மணிகண்ட சபையினர்கள்
நடாத்தும் (13ஆம்) பதின்மூன்றாம் ஆண்டு
மண்டல பூஜை மகர ஜோதிப் பெருவிழா
இடம்: கந்தர்மடம் ஸ்ரீ செட்டியந்தாழ்வு ஞானவைரவர் தேவஸ்தானம்
ஐயப்பன் மெய்யடியார்களே!
05.01.2011 (இன்று) புதன்கிழமை காலை 8.00 மணிமுதல் எம்பெருமானுக்கு விசேஷ அபிஷேகம், 108 கலசா அபிஷேகம், சாஸ்தா ஹோமம், நெய் அபிஷேகம், குருசாமி பூஜை, விசேட அலங்காரம், சக்தி பூஜை, இருமுடி கட்டுதல், நெய் நிரப்புதல், விசேட தீபாராதனை, சத்தியமான பொன்னு பதினெட்டுப் படிப்பூஜை. தொடர்ந்து மகேஸ்வர பூஜை, மாலை 4.00 மணிக்கு சகஸ்ரநாம அர்ச்சனை தொடர்ந்து சாமிமார்கள் இந்தியா சபரிமலை யாத்திரைக்குப் புறப்படுவர்.
குறிப்பு: சாமிமார்கள், அடியார்கள் வருகை தருவதோடு ஐயப்பன் பூஜையிலும், பஜனைகளிலும், அன்னதான நிகழ்வுகளிலும் கலந்து சிறப்பித்து ஐயப்பன் அருள்பெறுமாறு வேண்டுகின்றோம்.
சாமியே சரணம் ஐயப்பா!
இங்ஙனம்
ஸ்ரீ ஐயப்ப மணிகண்ட சபையினர்கள்
(3363)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 05.01.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.